

# எழுநிலம்

மாத இதழ் | மணம்- 5 | ஆகஸ்ட் 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052





ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாஞ் செயல்

எழுநிலம்

ஆகஸ்ட் 2021

தொடர்புகளுக்கு:
ezhunilam@yahoo.com

# திருக்குறள்




குறள் – 33

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்

பொருள் –
செய்யக்கூடிய வகையால்,
எக்காரணத்தாலும் விடாமல்
செல்லுமிடமெல்லாம் அறச்
செயலைப் போற்றிச் செய்ய
வேண்டும்.

வரலாற்றை அறிந்து
கொள்ளாதவர்களால்
வரலாற்றைப் படைக்க முடியாது.

*– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்*



# துணிந்தெழுந்து கூடித்தேரிழுப்போம்...

அணியணியாய் நாங்கள்
அண்ணனும் தம்பியரும்
அக்காளும் தங்கையராய்
அறங்கொண்ட வாழ்வுதனில்
அண்ணனின் வழியினிலே
துணிந்தெழுந்து நின்ற
துவழாத காலங்கள்...
பணியொன்றே குறியாய்ப்
பகைதீர்த்துப் படை நடந்து
பாடித் திரிந்தவேளைகள்,
குனியாத தலைகளும்
குன்றாத வீரங்களும்
நெஞ்சாரப் பொய்யிலா வாழ்வில்
அஞ்சோமே யார்க்குமென்று
பஞ்சமே இல்லாப் பாசம் நிறைவாழ்வு,
நினைத்துப்பார்க்கையில்
நீண்ட நெடுமூச்சு நெஞ்சைச்சுடுகிறது...
தலைகளை மீண்டும் நிமிர்த்தி,
தம்மைக்கொடை தந்த தன்னிகரில்லாத்
தெய்வங்களின் தாள்களைத் துணைகொண்டு,
தனித்து நின்ற தடங்கள் போதுமென்று,
குனிந்த தலைகளை நிமிர்த்தி கூட்டாய்த்
துணிந்தெழுந்து கூடித்தேரிழுப்போம்...

–காந்தள்–

# போலிகளைத் தூக்கியெறியவேண்டும்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நெருக்கடிகள் அதிகரித்திருக்கின்றன. சீனாவின் கால்கள் இலங்கையில் பதிந்திருந்தாலும், கடந்த பத்தாண்டுகளில்தான் இலங்கை சீன உறவு புதிய பரிணாமம் எடுத்திருக்கிறது.

ஆரம்பத்தில் இலங்கைமீது பொருளாதார ஆதிக்கத்தை மட்டுமே செலுத்தி வந்த சீனா, இப்போது அரசியலிலும் கலாசாரத்திலும் அதிக கவனம் செலுத்துகின்றது. சிங்கள தேசமும் தமிழர் தாயகமும் சீன மயமாக்கப் பட்டிருப்பது இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமையுமோ இல்லையோ, இது நிச்சயமாக தமிழர்கள் வாழ்வில் ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் காட்டப் போகிறது.

சீனாவுக்கு இலங்கையின் நிலப்பரப்பில் செய்வதற்கு பெரிதாக ஒன்றுமில்லை. அதன் நோக்கமெல்லாம் இந்து சமுத்திரத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே. இந்து சமுத்திரம் 'சீன சமுத்திரம்' ஆக மாறுமுன் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்ற நெருக்கடி நிலை இந்தியாவுக்கு. சீன அச்சுறுத்தலை இலங்கையில் குறைக்க வேண்டுமென்றால் இந்தியா மீண்டும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

'இலங்கையின் உண்மையான நட்பு நாடு சீனாதான்' என்றும், 'இனிவரும் காலங்களில் ஆசியாவின் எழுச்சியை சீனாவே வழிநடத்தும் என்பது தெளிவாகியுள்ளது' என்றும் ராஜபக்சே பகிரங்கமாகக் கூறியிருப்பதும் இந்தியாவுக்குப் பேரிடிதான். ஆழ்ந்து நோக்கினால், தெற்கே தமிழர்களைப் பகைத்திருப்பது, நேபாளம், வங்கம், பாக்கிஸ்தான் என்று அயல் நாடுகள் இந்திய வெளியுறவுக் கொள்கையை எதிர்த்து சீன ஆதரவாக மாறுவது (அல்லது சீனாவிடம் கடனாளியாகி கைகட்டிநிற்பது) போன்றன இந்தியாவுக்கு பெரும் பின்னடைவுகளே. பதிலுக்கு, கொழும்புக் கடலில் உருவாக்கப்பட்ட 'சீனத் தீவு', எந்தச் சிங்கள விதிமுறைகளுக்கும் உட்படாமல் சுயமாக இயங்குவது, இலங்கை அரசியலிலும் கலாசாரத்திலும் சீன ஊடுருவல் என்று சீனா ஆழ வேரூன்றுவது போன்றன இந்தியாவின் பதட்டத்திற்கான உறுதியான காரணங்கள்.

## ஆசிரியர் பக்கம்

இந்திய அரசு எப்படி ஈழத் தமிழர்களைப் பகடைக் காய்களாக்கி பந்தாடினர் என்பது நாம் அறியாததல்ல. பல்வேறு ஆயுதக் குழுக்களை உருவாக்கி, பயிற்சியளித்து இலங்கைக்கு குடைச்சல் கொடுத்த இந்தியாவுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர்கள் விடுதலைப்புலிகள். புலிகளின் காலத்தில் எந்தவொரு நாட்டினாலும் இலங்கையில் கூட நிலைத்திருக்க முடியவில்லை. தமிழர்களின் காப்பரணாக மட்டுமல்லாது சிங்கள நாட்டிலும் ஊடுருவல் இல்லாமல் காத்தவர்கள் புலிகள்.

1987 இல் நடந்த இந்திய- இலங்கை ஒப்பந்தம் மூலம், இலங்கை யாப்பில் செய்யப்பட்ட 13ம் திருத்தச் சட்டத்தை தமிழர்கள் மீது திணித்து தமிழர்களை அடக்கி வைக்கலாம் என்று கனவு கண்டன இரு அரசுகளும். 'மாகாண சபை முறை' நம்மை நாமே ஆள வழி செய்யும் என்று நம்பியவர்களும் உண்டு. காணி, காவற்துறை என்று எந்த அதிகாரங்களுமற்ற, 34 வருடங்களுக்குப் பின்னும் இன்னமும் சட்டமாக மட்டுமே இருக்கும் திருத்தச் சட்டம் எமக்கு எதுவுமே செய்யப் போவதில்லை என்பதை மக்கள் எப்போதோ புரிந்து கொண்டு விட்டார்கள். இப்போது, இதனை மீண்டும் தூசு தட்டித் தூக்கி, தென்னிந்திய தமிழர்களையும் எம்மவர்களையும் ஒருசேரத் திருப்திப்படுத்தப் பார்க்கிறது இந்தியா.

விளைவு, சில ஈழத் தமிழர்களை குழுக்களாகத் திரட்டி, அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, வீணாய்ப் போன இந்தத் தீர்வை ஏற்றுக்கொள்ள வைக்கும் முயற்சியை முடுக்கி விட்டுள்ளது இந்தியா. இந்தியாவுக்கு ஒரு காரணமுண்டு. இந்திய - இலங்கை ஒப்பந்தம் உயிர்ப்புடன் இருக்கும் வரையில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எதிரான எந்த ஒப்பந்தத்தையும் இலங்கையினால் செய்ய முடியாது.

இந்த 13ம் சட்டத் திருத்தத்தினால் எந்தவொரு பயனும் விளையப் போவதில்லை என்ற தலைவர் பிரபாகரனின் தீர்க்கதரிசனம் எவ்வளவு தூரம் உண்மை என்பது, 34 ஆண்டுகள் கடந்தும் இன்னமும் காகிதத்தில் வரையப்பட்ட சட்டமாக மட்டுமே 13ம் திருத்தச் சட்டம் இருப்பதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

ஆயிரமாயிரம் மாவீரர்களையும் இன உணர்வாளர்களையும் ஆகுதியாக்கிய மண்ணில் மீண்டும் அடிமைத் தளையை இறுக்கிப் பூட்டுவதற்கான செயற்பாடுகளின் பின்னணியை மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். போலிகளைத் தூக்கியெறிய வேண்டும்..

## மன்னார் மாவட்டத்திலிருந்து

# முதல் பெண் விமானி



மன்னார் மாவட்டத்திலிருந்து முதலாவது பெண் விமானியாக முதல் கட்ட பயிற்சிகளை நிறைவு செய்துள்ளார் இமானுவேல் எவாஞ்சலின்.


மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் வட்டக்கண்டல் காத்தான்குளம் கிராமத்தில் பிரான்சிஸ் இமானுவேல் தாசிலம்மா தம்பதியினருக்கு 1999 மகளாக பிறந்த இவர் பாடசாலைக் கல்வியை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் உயர்தரம் வரை நிறைவு செய்துள்ளார்.

சிறுவயது முதல் விமானியாக வரவேண்டும் என்ற இலக்கினை அடைவதற்காக சென்ற வருடம் (2020) ஜனவரி மாதம் கொழும்பில் உள்ள ஆசிய விமான நிலையத்தில் இணைந்து (Asian Aviation center Colombo Airport) முதல்கட்ட பயிற்சியினை (PPL Stage) நிறைவு செய்துள்ளார்.












இன்னும் இரண்டு வருடங்களில் அனைத்து பயிற்சிகளையும் நிறைவுசெய்து முழு விமானியாக வெளிவர உள்ளதாக மன்னார் மாவட்டத்தின் முதலாவது பெண் விமானி என்று பெயர் எடுத்து மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் செயல்பட்டு வரும் இமானுவேல் எவாஞ்சலின் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியாக மன்னார் மாவட்டம் சற்று பின்தங்கிய நிலையில் இருந்தாலும் கல்வி கலை கலாச்சாரம் விளையாட்டு தனிமனித திறமைகளில் மன்னார் மாவட்டம் எப்பொழுதும் முன்னிலையிலேயே நிற்கின்றது.

மன்னார் மண்ணிற்கு பெருமை தேடித்தரும் விதத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இமானுவேல் எவாஞ்சலின் அவர்களுக்கு தமிழ் மக்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வாழ்க வளமுடன்.

# ஈழத்துக் கவிஞகளின் நவீன கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும்

- அந்துவன் கீரன் -

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணியச் சிந்தனை வலுப்பெற்ற நிலையில் பெண்கள் தங்கள் சுய இருப்பை, உள்மனதை, பெண் நடத்தைவாத முறைகளை, நுண்மை, பருண்மைக் காட்சிகளைப், புற உலகத் தாக்குதல்களைத் தாங்களே விசாரணை செய்யத் துணிந்தனர். இதனால் 'கவிதை அரசியல்' புதிய பரிமாணத்தைப் பெற்றது. தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பெண்ணடையாள மையம் சிதைக்கப்படும் போது அவள் எழுத்தை ஊடகமாக்கினாள். பெண்ணின் வலியும், மனஉளைச்சலும் பெண்ணெழுத்தாக வடிவம் பெறும் போது பெண்ணின் உள்முகத் தன்மை புதிய அடையாளத்தைப் பெற்றது.

சமூக உறவுமுறைகளை மீறி பெண்ணின் அக அனுபவங்களை, அகச்சமூக முரண்களை, பெண்ணுடலை அவள் அரசியல் ஆக்க முற்பட்ட வேளையில் பெண் கவிதைகள் முனைப்பு பெற்றன. பெண் கவிஞர்களின் கவிதையின் பாடு பொருள், வடிவம், மொழி, ஆகிய புனைவு வெளிப்பாடுகளைப் பெண்ணிலை நோக்கில் அணுகும் பெண்மையவாதம் (Gyno Criticism), ஆண் சொல்லாடலை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதுடன் பெண் இலக்கியத்துக்கான இலக்கியமரபு, திறன் குறித்து ஒரு புதிய இலக்கிய வரலாற்றுக்கான தளத்தை உருவாக்குகிறது.







ஈழத்தில் 1983 களுக்குப் பின் ஆயுதப் போராட்டம் பரந்து பட்டரீதியில் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கடுமையான யுத்தத்துக்கு முகம் கொடுக்கலாயினர். அரசியல் பொருளாதார, சமூக முன்னேற்றம் கருதி மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் மக்களின் இயல்பு வாழ்வினைச் சிதைத்து அவர்களின் வாழ்வினை நிர்மூலமாக்கியது. ஆழமான விரிவான தளத்தில் தேசிய விடுதலைப் போராட்டக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் ஈழத்து நவீன கவிதைகள் மக்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசின. புதிய சிந்தனைகள் முன் வைக்கப்பட்ட நிலையில் உரமும் செழுமையும் கொண்ட பிரக்ஞை பூர்வமான கவிதைகள், நேர்த்தியான மொழிகளுக்கு ஊடாகப் புதியபடிமங்கள், புதிய வடிவங்களைத் தாங்கி வெளிவந்தன. அதிகார அசமத்துவப் போக்குக்


கெதிராக எழுந்த தமிழ்க் கவிதைகள் புண்ணுண்ட மனங்களுக்கூடாகப் போரின் வடுக்களைப் பேசின.

1980 களுக்குப் பின் ஈழத்தின் பல்வேறு பெண் கவிஞர்களின் போரியல் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுப்புக்களாக 'வானதியின் கவிதைகள் (1990), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), பாரதியின் காதோடு சொல்லிவிடு (1992), சிவரமணி கவிதைகள் (1993), தூயவளின் நிமிர்வு (1993), காலம் எழுதிய வரிகள் (1994), வானம் எம் வசம் (1995), வெளிச்சம் கவிதைகள் (1996), செல்வி - சிவரமணி கவிதைகள் (1997), செம்மணி (1998), ஆனையிறவு (2000), ஔவையின் எல்லை கடத்தல் (2000), ஆழியாளின் உரத்துப் பேச (2000), எழுதாத உன் கவிதை (2001), அம்புலி கவிதைகள்(2005), பெயரிடாத நட்சத்திரங்கள் (2011) முதலானவற்றைக் கூறலாம்.

அவ்வகையில் வன்னிநில வாழ் மக்களின் வாழ்வியல் அவலங்களைப் பெண் அல்லது பெண்ணியவாதப் படைப்புக்களுக்கூடாக வெளிக்கொணர்ந்த இதழ்களில் முக்கிய இதழ்களாக வெளிச்சம், சுதந்திரப்பறவை, எரிமலை, ஈழநாதம் (வெள்ளி வாரமலர்) போன்றன காணப்படுகின்றன.

அம்புலி, ஆதிலட்சுமி சிவகுமார், கஸ்தூரி, மலைமகள், தமிழவள், தமிழ்க்கவி, சுதாமதி, நாமகள், தூயவள், செந்தணல், பிரேமினி சுந்தரலிங்கம், மன்னார் ரூபி மாக்கிரெட், சோழநிலா, அலைஇசை போன்றோர் சிற்றிதழ்களுக்கு ஊடாகவும் தொகுப்புக்கவிதை நூல்களினூடாகவும் அறியப்பட்டவர்கள். போரையும் போரியல் வாழ்வையும் பாடும் இவர்கள் போரினை முகம் கொண்டவராகவும் போரின் பங்காளிகளாகவும் செயற்பட்டவர்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று அனுபவங்கள் இவர்களின் கவிதையின் பாடு பொருளாயின. ஆயுதம் தரித்த போராளிகளாக மாறி தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளைச் சாடும் இவர் கவிதைகள், பெண் விழிப்புணர்வுக்கு ஊடாக பெண் விடுதலையைச் சாத்தியமாக்குகின்றன. இவர்களின் பெரும்பாலான கவிதைகள் செப்பனிடப்படா வார்த்தைப் பிரமாணங்களுக்குள் சிக்கி, உணர்வுத் தளமற்று கருத்து உருவாக்கங்களுக்குள் சிதைந்து போவதாகக் காணப்படுகின்ற போதிலும் பெண்ணியல் அனுபவங்களுக்கூடாக விரியும் பெண்ணிய மொழி ஆங்காங்கே வீரியம் மிக்க சிறந்த கவிதைகளையும் தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்துள்ளது.

1980களில் ஈழத்துப் பெண் படைப்பிலக்கிய கர்த்தாக்களில் நன்கறியப்பட்ட ஒருவர் "சிவரமணி"







ஆவார். இவர் எழுதிய கவிதைகளில் எமக்கு கிடைக்கப் பெற்ற கவிதைகள் மிகச் சிலதே ஆயினும் அவரெழுதிய அத்தனை கவிதைகளும் சொல் நேர்த்தி கொண்டவை. எளிமையான மொழிநடைக்கூடாகக் கட்டுரும் இக்கவிதைகள் புதிய காட்சிப் படிமங்களுக்கூடாக வடிவமைக்கப்பட்டவை. யுத்த சூழலின் கொடுவடுக்களின் சாட்சியமாகவும் பெண்ணுணர்வின் பிரதிமையாகவும் உருப்பெறும் சிவரமணியின் எழுத்துக்கள் தன்னைச் சுற்றியுள்ள சமூக இயங்கியலின் இயற் பியலையும் துல்லியமாகச் சித்திரிப்பவை. சிவர மணியின் "யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்" கடந்தகால அரசியல் சமூக ஓட்டத்தையும் சம்பவங்களையும் யதார்த்தத்தின் குரூரத்தையும் அழுத்தமாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்துகின்றது.

'தெருவில் அவலமும் பதற்றமுமாய் நாய்கள் குரைக்கும் போது பூட்டப்பட்ட கதவுகளை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து விட்டு எல்லோரும் தூங்கப் போகும் நேரத்தில் நான் நாளைக்கு தோன்றுகின்ற சூரியனை பற்றி எண்ண முடியாது இரவு எனக்கு முக்கியமானது. நேற்றுப்போல் மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து போகக் கூடிய இந்த இருட்டு எனக்கு மிகவும் பெறுமதியானது"

போர் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட கலாச்சாரத் தடைகளைத் தகர்க்கிறது. போர்க்களம் சென்ற பெண்கள் இரவுக் காவல்பணிகளில் ஈடுபடுதலும் எல்லைப் புறங்களில் வேவு பார்க்கச் செல்வதும் போரில் சமராடுவதும் இயல்பாகவே நடைபெறும் ஒன்று. சிவரமணியின் அதே இருள் வித்தியாசமான பரிமாணத்தில் அம்புலியின் கவிதையில் உருப்பெறுகிறது.

"கண்ணுறக்கம் தவிர்ந்த நடுநிசி
எல்லை வேலியில்
நெழுப்பேந்துகிறது என்னிதயம்
ஓராயிரம் விழிகளின்
உறக்கத்துக்கான
உன் காவலிருப்பு
நாளையும்
நான் வாழவேண்டும்

எனதிழப்பின்
நிரப்ப முடியா இடைவெளி புகுந்து
பகை வரலாம்
புதிதாய்ஒரு புலி
விரைந்து வரும் வரை
இரட்டிப்பு விழிப்போடு காத்திருக்கும்
என் தோழியின் காவலுக்கு
என்னிழப்பு காரணமாயிருக்கக் கூடாது
நாளையும் நான் வாழவேண்டும்"

ஈழப்பிரதேசத்தின் பெரும் பகுதி யுத்தமாக விரிந்த காலப்பகுதியில் ஆட்கடத்தல்கள், நீசப்படு கொலைகள் மனிதவாழ்வைச் சிதைத்தது. பிண வாடையே இல்லாத பொழுதுகள் இல்லை என்னும் அளவுக்கு நாள்தோறும் நடுத்தெருக்களில் உத்தியோகப் பணிமனைகளில் உறங்கும் வீடுகளில் மனிதர்கள் கடத்தப்பட்டு, வேட்டையாடப்பட்டனர். பள்ளிச் சிறார்கள் கூட தங்கள் சீருடைகளில் விதிவிலக்கின்றி வேட்டையாடப்பட்டனர். கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனோருக்காகவும் வதையின் பின் புதைக்கப்பட்டவருக்காகவும் ஈழத்தில் 'செம்மணி' என்னும் தொகுப்பு புதுக்குடியிருப்பு அந்திவானம் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டது. பிரமிளா, சோழநிலா, தயாமதி, சுதாமதி, தமிழவள், மலைமகள், தூயவள், அம்புலி முதலான பெண் கவிஞர்களின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றன. இத் தடத்தில் வெளிவந்த அங்கயையின் கவிதை, சீரழிந்த அரசியல் சூழலால் காவு கொள்ளப்பட்ட பூர்வீகப் பூமியில் வேட்டையாடப்பட்ட பள்ளிச் சிறுமியை, யதார்த்த வாழ்வியலுக்கூடாக படிப்பவர் மனதில் ஆழமான வருத்தத்தைத் தூண்டும் வகையில் வெளிப்படுத்துகிறது.

"உன் முற்பகல் நினைவுகளோடுதான்
தேடினேன்
கறுப்புத்திரையில்
உன் சுவடுகளின்
புள்ளிகள் ஏதுமில்லை
தென்படாத உன் வட்டமான
முகத்துக்காக ஏங்கினேன்
பள்ளிக்கூடம் வெறுமையில் கிடக்கிறது.
சூரியன் மேற்கிளம்பும் காலையில்
நாங்கள்
சீருடையணிந்து
பள்ளிக்கு சைக்கிளில் போனது நேற்றுத்தானே
வழிகள்தான்
பொல்லாதவை
பெரியவாய் திறந்து விழுங்கி விடும்.
அபாய வளைவுகள்
நிறையவேயிருந்தன.
நீ எங்கே என்று தொடர்ந்து தேடியதில்
உன் உதிர்ந்த
நகங்கள்லிருந்து
முளைத்திருந்த காளான்கள்
மணந்தன நாறி"

ஈழத்தில் மனிதர்கள் தங்கள் இயல்பை இழந்து நரகத்தில் வாழும் துன்பியல் நிலையை இக்கவிதையினூடாக நாம் தரிசிக்கலாம். இங்கு நிகழ்வுகளின் வீரியம் பொதுமைப்பட்ட ஒன்றாகக் காணப்படுகிறது. நடப்பியலின் உட்தோய்தல் கவிதையைச் செழுமைப்படுத்துகிறது.

நிகழ்காலத்தின் நினைவின் வேராக இக் கவிதை மனதில் நிழலாடிச் செல்கிறது. தமிழீழ தாயக விடுதலைப் போராட்டத்தில், போராட்டத்துடன் இணைந்து செயற்பட்ட ஈழத்துக் கவிஞைகளின் கவிதைகள் போரியல் வாழ்வைப் பேசின. போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களை, அநுபவங்களின் வாயிலாக வெளிப்படுத்தும் இக்கவிதைகள் காலத்தின் பதிவுகளாகும். சிங்கள இன வன்முறையையும் மக்களின் துன்பியலையும் மாத்திரம் பேசாது, விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியையும் போரியல் முறைமைகளையும் பேசிய கப்டன் வானதி, மேஜர் பாரதி, கப்டன் கஸ்தூரி முதலானோரின் கவிதைகள் மனித வாழ்வுடன் போராட்டத்தையும் இணைத்துக் கொண்டன.

- அடுத்த இதழில் தொடரும்....

# வரலாற்றில் ஒரு நாள்

சிங்களப் பெண்ணின் நடத்தைக்குக் களங்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காக ராணுவ வீரனை நிபந்தனையின்றி விடுதலை செய்தவர் தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள்.

வீரம், அன்பு, பண்பு போன்ற உயரிய பழக்க வழக்கங்கள் நம் தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமானது. உலகில் உள்ள எந்த நாட்டு ராணுவ அமைப்பிலும், காவல்துறையிலும் இல்லாத மனித நேயங்களை நாம் விடுதலை புலிகள் இயக்கத்தில் மட்டுமே பார்க்க முடியும்.

திருமணமான சில மாதங்களில் போருக்கு வந்த ஒரு சிங்கள வீரன், விடுதலைப் புலிகளிடம் சிறைப்பட்டுவிட்டான். கைது செய்யப்பட்ட அந்த வீரன் புலிகளின் சிறையில் சில வருடங்கள் இருந்தபோது அவன் தன்னுடைய இளம் மனைவியை சந்திக்க வேண்டும் என்று இயக்கத்தின் பொறுப்பாளர்களுக்கு கடிதம் எழுதினான், அந்த கடிதம் தலைவரிடம் சென்றது.

தலைவரிடம் அதற்கு அனுமதியும் கிடைத்தது. குறிப்பிட்ட ஒருநாளில், சிங்கள வீரனின் மனைவி அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்தாள். தனது கணவனை சந்தித்து பேசினாள், மாலை வரை இருவரும் குடும்ப விஷயங்களை பேசினார்கள். மாலையில் அனுராதபுரத்துக்கு செல்லும் ரயில் நிலையத்துக்கு அந்தப் பெண்ணை புலிகள் அழைத்துச் சென்றனர்.

ஆனால், ஏதோ காரணத்தால் அன்று அந்த ரயில் வரவில்லை. என்ன செய்வது? ஒரு பெண்ணை, அதுவும் சிங்கள இனத்தை சேர்ந்த ஒரு ராணுவ வீரரின் மனைவியை எங்கு தங்க வைப்பது? என்று பொறுப்பாளர்கள் தடுமாறினார்கள். தகவல் தலைமைக்கு சென்றது, அந்த பெண் தனக்கு எந்த இடம் பாதுகாப்பானது என்று கருதுகிறாளோ அந்த இடத்தில் தங்க வையுங்கள் என்று தலைவர் சொல்லிவிட்டார்.

அந்த பெண் தன் கணவனுடன் தங்க விரும்பினாள். அவளின் விருப்பப்படியே கணவனும் மனைவியும் தங்கினார்கள். இரவு முழுவதும் கணவனுடன் தங்கிய அந்த பெண், மறுநாள் மகிழ்ச்சியுடன் தன்னுடைய உறவினர்கள் உள்ள பகுதிக்கு சென்றுவிட்டாள். ஆனால், மூன்று மாதத்திற்கு பிறகு புலிகளின் தலைமைக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், தான் கணவனை சந்திக்க வந்தபோது மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டமைக்கு நன்றி தெரிவித்து எழுதியிருந்தாள் அந்த பெண். கூடவே தான் கருவுற்று இருப்பதாகவும், ஆனால் இந்த கரு எப்படி உருவானது என்று உறவினர்கள் கேட்டால் நான் என்ன செய்யட்டும், நானும் எனது கணவனும் சேர்ந்து இருந்ததால் தான் இந்த கரு உருவானது என்று சொன்னால் இந்த உலகம் நம்புமா? இதனால் என் நடத்தையின் மீது கெட்ட பெயர் உருவாகுமோ? என்று தான் பயப்படுவதாக சொல்லி கடிதம் வந்தது.

அந்தப் பெண்ணின் கடிதம் தலைவரின் பார்வைக்கு போனது. ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த சிக்கல் சாதாரணமானதல்ல. இதை தீர்க்க வேண்டும் என்று முடிவு செய்த தலைவர் மீண்டும் அந்த பெண்ணுக்கு கடிதம் எழுதினார்.

நீ, உனது மாமியார் மற்றும் உங்கள் ஊரின் பௌத்த மதகுரு மூவரும் குறிப்பிட்ட இந்த நாளில் கிளிநொச்சிக்கு வாருங்கள் என்று அந்த கடித்தத்தில் எழுதப்பட்டிருந்தது.

அதன்படி கிளிநொச்சிக்கு வந்த அந்த மூவரையும் அழைத்து சென்று அந்த சிங்கள வீரனிடம் விட்டார்கள், தாங்கள் இருவரும் ஒருநாள் இரவு சேர்ந்திருந்தது உண்மை என்றும் தன்னுடைய மனைவியின் வயிற்றில் வளரும் கரு என்னுடையதுதான் என்றும் தான் தாயிடமும், மதகுருவிடமும் சொன்னான் அந்த சிங்கள ராணுவ வீரன். என் கணவன், மாமியார், மதகுரு மூவரும் உட்கார்ந்து பேசி விட்டதால் எனக்கு குடும்பத்தில் ஏற்பட்ட களங்கம் தீர்ந்துவிடும். ஆனால், ஊரில் உள்ளவர்கள் எப்படியும் என்னுடைய நடத்தையை தவறான கண்ணோட்டத்தில் தான் பார்ப்பார்கள், பேசுவார்கள். நான் என்ன செய்யட்டும் என்று அந்த சிங்களப் பெண் கண்ணீரோடு நின்றாள்.

அந்த சிங்களப் பெண்ணின் நடத்தையை யாரும் சந்தேகிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார் தலைவர். உலகின் எந்த நாட்டு ராணுவத்திலும் செய்யாத ஒரு காரியத்தை செய்தார். ஆமாம், அந்த ராணுவ வீரனை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய்தார்.

பெண்ணின் கண்ணீருக்கும் நெறியுடன் கூடிய வாழ்வுக்கும், மதிப்பளிக்கும் வழக்கம் தமிழில் உள்ள புறநானூற்று பாடல்களில் மட்டுமே காணலாம். ஆனால் அந்தப் பண்பை உலகமக்கள் தேசியத் தலைவரிடம் கண்டார்கள்.



# எனது


## ( வானதியின் கவிதைகள் தொகுப்பிலிருந்து )

எனது
பேனா கூரானது
எனது
கைகளில் உள்ள
துப்பாக்கியைப் போல

ஆனால்
துப்பாக்கி
சன்னத்தை மட்டுமே துப்பும்
எனது பேனாவோ
சகலதையுமே கக்கும்!

எந்தப் போட்டிகளிலும்
கலந்து கொள்ள - எனது
கவிதைக்கு அனுமதியில்லை
ஆனால்
எமது உணர்வுகளை
அவமரியாதை செய்து
அனுமதி வழங்கத்
தவறும் இடங்களில்
எனது பேனா
உத்தரவின்றி
உட்பிரவேசிக்கும்!!

பாராட்டுக்களோ
அன்றி பரிசுகளோ
என் கவிதையை
பரவசப்படுத்துவதில்லை
ஏனெனில்!
மிக உயர்ந்த பரிசும்,
மிக்..மிக்உயர்ந்த
பாராட்டும் அன்று
என் கவிதைக்கு
கிடைத்ததால்தான்
இன்று - என கவிதை
பரிசுத்தமாய் இருக்கிறது.



எனது
பேனா கூரானது!
எனது
கைகளில் உள்ள
துப்பாக்கியைப் போல!!

எந்த
கலாநிதியுடனும்
எந்த
வித்துவானுடனும்
எந்த
பண்டிதருடனும்
என் கவிதை சவால் விடும்
ஏனெனில்
எனது பேனாவில் உணர்வுகள்
உயிருள்ளவை!

எமது
உணர்வுகளை
கொச்சைப்படுத்தும்
சில பேனாக்களுக்கு
ஓர் வேண்டுகோள்!
முகவரி தாருங்கள்
உங்கள் முகத்திரையை
என் பேனா கிழிக்கும்!

# பேனா



எனது பேனா
கூரானது!
எனது கைகளிலுள்ள
துப்பாக்கியைப் போல!

எனது துப்பாக்கி
எதிரியை மட்டுமே
குறிபார்க்கும்
எனது பேனாவோ



எல்லாவற்றையும்
பதம்பார்க்கும்!

எனது
பேனாவின்
நினைவுகளின்
இறந்தகாலம்
நிகழ்வுகளின் நிகழ்காலம்,

எனது
பேனாவின்
நினைவுகளின்
நிகழ்காலம்
நிகழ்வுகளின் எதிர்காலம்
புரியவில்லையா?
என் கவிதைகளை
நீ புரியவில்லை!!

இது
எனக்குக் கிடைத்த
வெற்றியல்ல!
எனது
கவிதைக்குக் கிடைத்த
வெற்றியுமில்லை!
எனது
பேனாவின் வெற்றிகள்!!!

எனது கைகள்
நாளை ஓயலாம்
அன்றி..ஒடியலாம்
ஆனால்
எனது பேனாவோ
ஓயப் போவதில்லை
எமது துப்பாக்கியைப் போல!
மன்னார் அனுபவத்தின் பின்
எனது பேனா கூரானது
கைகளிலுள்ள
துப்பாக்கியையும் விட
எனது பேனா கூரானது!!

## கண்ணிவெடித் தாக்குதல்:

# உயிர் தப்பிய இராணுவச்சிப்பாயின் அனுபவங்கள்!

**திருநெல்வேலி கண்ணிவெடி தாக்குதல்: உயிர் தப்பிய இராணுவச்சிப்பாயின் அனுபவங்கள்!**

1983 ஜூலை 23 அன்று திருநெல்வேலி, தபால் பெட்டி சந்தியில் இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இலங்கையில் அதிக இராணுவத்தினர் கொல்லப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.

தாக்குதலிற்குள்ளான இராணுவ வாகன தொடரணியில் சென்ற இராணுவத்தினரில் இருவர் மட்டுமே உயிர்பிழைத்தனர். அதில் ஒருவர் மட்டுமே இப்போது உயிரோடு உள்ளார். சார்ஜன்ட் உபாலி பெரேரா என்பவரே தாக்குதலில் உயிர் தப்பினார். அவர் தனது அனுபவங்களை சிங்கள ஊடகங்களில் பகிர்ந்து கொண்டார்.

“அந்த நேரத்தில் இராணுவத்தில் சேருவது மிகவும் கடினமான பணியாக இருந்தது. பல நேர்காணல்களுக்கு செல்ல வேண்டும். அங்கு, உயரம், கல்வித் தகுதிகள், விளையாட்டுத் திறன் மற்றும் குடும்பப் பின்னணி போன்ற விஷயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. எப்படியோ நான் 1973 ல் இராணுவத்தில் சேர்ந்தேன். அடிப்படை பயிற்சி தியதலாவ இராணுவ பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்றேன். எங்கள் குழுவில் சுமார் 450 பேர் இருந்தனர். 1971 இல் நான் இராணுவத்தில் சேர்ந்தபோது ஜே.வி.பி. எழுச்சிக்குப் பிறகு, நாடு அமைதியாக இருந்தது. எங்கள் பெரும்பாலான நேரம் பயிற்சி, விளையாட்டில் செலவிடப்பட்டது.

அந்த நேரத்தில் வடக்கு மாகாணத்தில் பயங்கரவாத பிரச்சினைகள் எதுவும் இல்லை என்றாலும், கடத்தல் பரவலாக இருந்தது. வட கடற்கரை இந்தியாவுக்கு அருகாமையில் இருப்பதால், இப்பகுதியில் கடத்தல்கள் பெரியளவில் இடம்பெற்றது. அதாவது, ஓபியம், துணி, பீடி, போதை மருந்துகள் இந்தியாவில் இருந்து கடத்தப்பட்டன. இதைத் தடுக்க, ஓகஸ்ட் 14, 1963 அன்று யாழ்ப்பாணத்தின் பலாலியில் குடிவரவு தடுப்பு முகாம் நிறுவப்பட்டது. கடற்கரையோரம் சிறிய முகாம்களை அமைத்தனர்.

ஆரம்பத்தில் நாங்கள் கடத்தலைத் தடுக்கச் சென்றோம், ஆனால் 80 களில் ஒரு குழு தமிழ் இளைஞர்கள் ஒரு தனி இராச்சியத்திற்காக போராடுவதாக கேள்விப்பட்டோம். ஆனால் ஆரம்ப நாட்களில், அவர்களின் இலக்குகள் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் போலீஸ் அதிகாரிகள்தான். எனவே, இராணுவத்திற்கு அதிக வேலை இருக்கவில்லை.

நான் பணியாற்றிய 1வது காலாட்படை கொழும்பில் கடமையில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் சிங்க ரெஜிமென்ட் கடமையில் இருந்தது. பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து சிங்க ரெஜிமென்ட் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு, எங்கள் ரெஜிமென்ட் யாழ்ப்பாணத்திற்குச் சென்று கடமையை ஏற்றது. அப்போது ஆயுதப்படை புலனாய்வு ஒருங்கிணைப்பு தலைமையகம் யாழ்ப்பாணத்தின் குருநகரில் அமைந்திருந்தது. கூடுதலாக, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மாதகல், பலாலி, ஆனையிறவில் ஆல்பா, பிராவோ, சார்லி, டெல்டா, எக்கோ எனப்படும் ஐந்து முகாம்கள் அமைக்கப்பட்டன. நான் மாதகல் முகாமில் கடமையில் இருந்தேன்.

# கொல்லப்பட்ட 13 சிறிலங்கா இராணுவத்தினர்





1 வது இலங்கை காலாட்படை யாழ்ப்பாணத்தில் கடமைகளை ஏற்றுக்கொண்ட அதே நாளில், யாழ்ப்பாணத்தில் ஒரு சம்பவம் நடந்தது, இது விடுதலைப் புலிகளுக்கு பெரும் அடியாகும். அந்த நேரத்தில் புலிகளின் முக்கிய நபராக இருந்த சீலன் அல்லது சாள்ஸ் அன்ரனி, ஜுலை 15, 1983 அன்று இராணுவ கொமாண்டோ தாக்குதலில் கொல்லப்பட்டார். சாள்ஸ் அன்ரனி பிரபாகரனின் நெருங்கிய கூட்டாளியாக இருந்தார். பிரபாகரனின் மூத்த மகனுக்கு சாள்ஸ் அன்ரனி என்றும், பின்னர் புலிகளின் சிறந்த படைப்பிரிவு சாள்ஸ் அன்ரனி என்றும் பெயரிடப்பட்டது.

இதற்கிடையில், 23 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் ஏதாவது தாக்குதல்கள் நடக்கலாமென இராணுவ உளவுத்துறை தகவலை பெற்றது.

நாங்கள் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை, ஏனெனில் அந்த நேரத்தில் புலிகள் சிறியளவில், ஒன்று இரண்டு வீரர்களை தாக்கினார்கள். ஆனால் ஒரு இராணுவக் குழு அல்லது முகாமை தாக்கவில்லை. இருப்பினும், ஆனைக்கோட்டை போன்ற பொலிஸ் நிலையங்களை தாக்கி ஆயுதங்களை கைப்பற்றினர்.

உளவுத்துறை செய்தியையடுத்து, ஒரு விசேட ரோந்து திட்டமிடப்பட்டது.

2 வது லெப்டினன்ட் வாஸ் குணவர்தன தலைமையிலான 15 பேர் கொண்ட எங்கள் அணி ரோந்திற்கு புறப்பட்டது. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, அன்று அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு ஆனந்தா-நாலந்தா கிரிக்கெட் போட்டி நடந்தது. அந்த போட்டியில் ஆனந்தா வென்றதை அறிந்த அவர், "கோப்ரல் உபாலி போட்டியில் நாங்கள் வென்றோம்" என்று என்னிடம் கூறினார். சக அதிகாரிகளிற்கு அவர் விருந்தளித்தார்.

அன்றைய ரோந்துக்கு வழங்கப்பட்ட ரகசிய குறியீடு 'பிராவோ 4'. ஆட்களை இருளில் அடையாளம் காண இரகசிய குறியீடாக இதை பயன்படுத்துவோம். ரோந்துக்காக ஒரு ஜீப்பும் லொறியும் வந்திருந்தன. லெப்டினன்ட் வாஸ் உடன் சுமார் 5 பேர் ஜீப்பில் ஏறினர். நான் சென்ற லொறியில் சுமார் 10 பேர் ஏறினார்கள். பலாலியிடமிருந்து கட்டளைகளை எடுத்து யாழ்ப்பாணத்திற்குச் சென்று நாக விஹாரை போன்ற இடங்களுக்குச் சென்று குருநகர் முகாமுக்கு அறிக்கை அளிப்பதாக இருந்தது. இரவு 9.00 மணியளவில் கிளம்பினோம். எந்த பிரச்சனையும் இல்லாமல் யாழ்ப்பாணத்திற்கு வந்தோம். பின்னர் குருநகர் முகாமுக்குச் சென்று, மீண்டும் முகாமிற்கு புறப்பட்டோம்.

அப்போது நல்ல இருள். எங்கள் குழு பலாலி வீதியில் உள்ள பல்கலைகழகத்திற்கு அருகிலுள்ள திருநெல்வேலியை அண்மித்தது. இடையிலிருந்த தபால்பெட்டி சந்தியிலேயே புலிகள் பதுங்கியிருந்தனர்.

இன்று இந்த இடம் ஒரு பரந்த வீதியாக உள்ளது. ஆனால் 1983 ஆம் ஆண்டில் இது இருபுறமும் கட்டிடங்கள் மற்றும் சுவர்களால் மூடப்பட்ட ஒரு குறுகிய வீதியாக இருந்தது. அந்த நேரத்தில்

அப்பகுதிக்கு தொலைபேசி வசதிகளை வழங்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. வீதியின் குறுக்கே பள்ளங்கள் வெட்டப்பட்டிருந்தன.

செல்லக்கிளி தலைமையிலான புலிகள் தாக்குதலிற்காக வந்திருந்தனர். அதில் விக்டர், புலேந்திரன், சந்தோசம், அப்பையா, பசீர் காக்கா உள்பட 14 பேர் இருந்தனர். காங்கேசன்துறையில் உள்ள ஒரு சிமெண்ட் தொழிற்சாலையில் இருந்து எடுக்கப்பட்ட வெடிபொருட்களும் இருந்தன. தொலைபேசி திட்டத்திற்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் வெடி பொருட்களை வைத்து மண்ணில் புதைத்தனர். பின்னர் அவர்கள் இருபுறமும் சுவர்களின் பின்னாலும், கட்டிடங்களிலும் மறைந்திருந்தனர்.

இரவு 11.00 மணி இருக்கும். எங்கள் இரண்டு வாகனங்களும் திருநெல்வேலியை நெருங்கிக்கொண்டிருந்தன. திடீரென்று ஒரு வெடிப்பு கேட்டது. முன்னால் சென்ற ஜீப் அப்படியே நின்றது. குண்டுவெடிப்பில் யாரும் கொல்லப்படவில்லை. அதே நேரத்தில், இரு தரப்பிலிருந்தும் தாக்குதல்கள் நடந்தன. நடு வீதியில் நின்ற எங்கள் மீது இருளில் மறைந்திருந்த புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நாங்களும் வாகனங்களில் இருந்து இறங்கி தாக்கினோம். வாகனங்களில் மறைந்திருந்து தாக்கினோம். நேரம் செல்ல செல்ல எங்கள் எதிர் தாக்குதல்கள் குறைந்துவிட்டன. எங்கள் தரப்பில் ஆட்களை இழந்தோம். என் இரு கால்களிலும் காயமடைந்தேன், உடலில் சிறு காயங்கள் ஏற்பட்டன. என்னுடன் அமர்ந்திருந்த லான்ஸ் கோப்ரல் சுமதிபால வயிற்றில் காயமடைந்தார். நான் சுமதிபாலவை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள தோட்டத்திற்குள் பாய்ந்தேன்.

சுமதிபாலவை ஒரு புதரில் மறைத்து, கத்த வேண்டாம் என்று சொன்னேன். அருகிலுள்ள கூரை மீது ஏறிப் பார்த்தேன். புலிகள் துப்பாக்கிச் சூட்டை நிறுத்திவிட்டு வீதிக்கு வந்து, வீழ்ந்து கிடந்த இராணுவத்தினரிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்களை எடுப்பது தெரிந்தது. என் காலில் இருந்து ஓடிய ரத்தம் மரத்தால் வழிந்து தரையில் விழுந்தது. நாய் குரைத்தது. நான் என் பூட்ஸ் லேஸை கழற்றி என் காலை இறுக்கிக் கட்டினேன். சிறிது நேரத்தில் புலிகள் அங்கிருந்து சென்று விட்டனர்.

நான் கீழே இறங்கி வீதிக்கு சென்றேன். அங்குள்ள காட்சி இன்றும் மறக்கமுடியாதது. இது ஒரு போர்த் திரைப்படக் காட்சி போலிருந்தது. சக வீரர்கள் வீதியில் ஆங்காங்கே விழுந்திருந்தனர். சார்ஜென்ட் திலகரத்ன பலத்த காயத்துடன் முனகிக் கொண்டிருந்தார்.

எங்கள் தலைமை லெப்டினன்ட் வாஸ் குணவர்தன தரையில் கிடந்தார். அவரிலும் கொஞ்சம்




உயிரிருந்தது. இனி என்ன செய்வது, முகாமிற்கு எப்படி தகவல் தெரிவிப்பது என யோசித்தேன். அப்போதுதான், இரண்டு மைல் தொலைவில் ஒரு கோண்டாவில் பஸ் டிப்போ இருந்தது நினைவிற்கு வந்தது. நான் காலில் காயத்துடன் பஸ் டிப்போவுக்குச் சென்றேன். காவலர் அங்கு நின்றார். அவரை என் காவலில் எடுத்து, முகாமுக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கச் சொன்னேன். அவரும் மிகவும் பயந்து அழைப்புகளை எடுத்தார். சிறிது நேரம் கழித்து, எங்கள் பிராவோ அணியின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் வீரசிங்க வந்தார். எனது ஆயுதத்தையும் மீதமுள்ள வெடிமருந்துகளையும் அவரிடம் ஒப்படைத்தேன்.

பின்னர் தாக்குதல் நடந்த இடத்திற்கு சென்றோம். காயமடைந்த சுமதிபால மறைத்து வைக்கப்பட்ட இடத்தில் இருந்தார். திலகரத்தின, சுமதிபால, நானும் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாண மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோம். எனினும், திலகரத்தின மருத்துவமனையில் இறந்தார்.

காலையில், அப்போதைய இராணுவத் தளபதி திஸ்ஸ இந்திக வீரதுங்க, டென்ஸில் கொப்பேகடுவ, சரத் முனசிங்க ஆகியோர் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு வந்தனர். சேவியர் என்ற தமிழ் மருத்துவர் ஒருவர் வந்து எனக்கு அறுவை சிகிச்சை செய்தார். அவர் அதை நன்றாக செய்தார். நான் எழுந்தபோது, என் மார்பில் ஒரு பதவி உயர்வு பதக்கம் இருந்தது. அதாவது, நான் கோப்ரல் பதவியில் இருந்து சார்ஜென்ட் பதவிக்கு உயர்த்தப்பட்டேன். இது இலங்கையில் முதல் போர்க்கள ஊக்குவிப்பு ஆகும். அன்று மாலை காயமடைந்த சுமதிபால மற்றும் நானும், 13 பேரின் உடல்களும் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

15 பேர் கொண்ட அணியில் 13 பேர் உயிரிழந்தனர். நானும், சுமதிபாலவும் மட்டும் தப்பித்தோம். இப்போது சுமதிபால உயிருடனில்லை" என்றார்.

# 1983 தின்னவேலித்

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் பலரும் நேரடியாகவே பங்கேற்று நடத்திய முதலாவது மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். இந்நிகழ்வு விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியது. இத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் லெப்டினனன்ட் செல்லக்கிளி அம்மான் கொல்லப் பட்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாக அதிக எண்ணிக்கையிலான படையினர் கொல்லப்பட்டது இத்தாக்குதலில் ஆகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் அணித் தளபதி லெப்டினனன்ட் சீலன், ஆனந்த் ஆகியோர் வீரமரணம் இடைந்த 8 ஆம் நாளில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இலங்கை இராணுவம் தனக்கு சிம்ம சொப்பனமாக இருந்து லெப்டினனன்ட் சீலன் கொல்லப்பட்ட தாக்குதலை ஒரு பெரும் படை நடவடிக்கையாகவே மேற்கொண்டது. அப்போது யாழ்ப்பாணப் படைத் தலைமையகமாக இயங்கிய குருநகர் இராணுவ முகாமில் வைத்து அப்போதைய யாழ். சிறிலங்கா படைத் தளபதி பிரிகே-டியர் பல்தசார் தலைமையில் இந்த நடவடி-க்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்பின் அடுத்த தாக்குதல் இலக்கு குருநகரில் வைத்து திட்டமிடப்பட்டது.


இதன்படி பலாலிப் பகுதியில் இருந்து ஒரு இராணுவ அணியும் குருநகரில் இருந்து ஒரு இராணுவ அணியும் நகர்ந்து விடுதலைப் புலிகளைத் தாக்குவது அவர்களின் திட்டம். பலாலியில் இருந்து நகரும் அணிக்கு "போ போ பிராவோ" என்ற குறியீட்டுப்பெயர் சூட்டப்பட்டது.



குருநகர் அணிக்கு 'போர் போர் சாளி' என்ற குறியீட்டுப்பெயர் சூட்டப்பட்டது. இதில் போ போ பிராவோ அணி வாகனத்தில் வந்தபோது விடுத லைப் புலிகள் திருநெல்வேலி-பலாலி வீதி யிலுள்ள தபால் பெட்டிச் சந்தியில் வைத்து கண்ணிவெடி மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலை நடத்தினர். இதில் 13 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் வே. பிரபாகரன், கேணல் கிட்டு, லெப். கேணல் விக்டர், லெப். கேர்ணல் பொன்னம்மான், லெப் கேணல் அப்பையா அண்ணை, லெப் கேணல் சந்தோசம், லெப் கேணல் புலேந்தி அம்மான், மேஜர் கணேஸ், பசீர் காக்கா உட்பட பல மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தாக்குதல் ஒரு பார்வை




இன்றைய நவீன உலகின் இலத்திரனியல் மயமாக்கல் தன்மையினால் எமது சமூகத்திடம் வாசிப்பின் தன்மை குறைவாகவே காணப்படுகிறது. நவீன, இவ் விஞ்ஞான யுகத்தில் இணையத்தளங்கள் உருவாகி, பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகமாக உள்ளதால் சோம்பேறித்தனமான நிலையில் கைபேசி, கணணி என்பனவற்றிலுள்ள போட்டி விளையாட்டுக்களில் ஈடுபட்டு, தம் நேரத்தை அதில் செலவழித்து சிந்தனைத் திறனை இழந்து , வாழ்கிறார்கள்.

"வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமடைகிறான்" என்று கூறுவார்கள். வாசிப்பதால் எமக்கு அறிவு வளர்வதோடு சிந்திக்கும் ஆற்றல், கற்பனை வளம், பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள், சீரான மன நிலை (சலனமற்றமனநிலை), மன ஒருமைப்பாடு என பலர் ஆற்றல்கள் கிடைக்கிறது.



அறிவு என்பது அவன் கற்கும் புத்தகங்களிலிருந்தே வருகிறது. இதனை மிக அழகாக நாலடியார் எனும் நூலில் ஔவையார் பின்வருமாறு கூறியுள்ளார்.

' நீரளவே ஆகுமாம் நீராம்பல் -
தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு.'

நாம் வாசிப்பதால் நம் அறிவு வளர்கிறது. இதனால் ஆக்கபூர்வமான விடயங்களை எழுதவோ விவாதிக்கவோ முடியும். இவ் வாசிப்பு பழக்கத்தை நாம் சிறுவர் மத்தியில் தூண்ட வேண்டும். கருவுற்ற பொழுதே நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். சான்றோர் இதனை

'ஒரு தாயின் எண்ணங்களே குழந்தையின் அறிவில், அதாவது மூளையில் பதிக்கப்படுகிறது' என கூறுவார்கள். எனவே தாயானவள் குழந்தையின் சிறுபிராயத்திலேயே வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும். வாசிப்பு என்பது எரிச்சல் தரும் செயலல்ல. அது எம் அறிவுத்திறனை திறந்து எதிர்காலத்தின் வெற்றிக்கான பாதையைக் காட்டும் திறவுகோலாகும். வாசிப்பு உணர்வை தூண்டுவதன் மூலம் எமது சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி ஒரு தெளிவான பார்வையைப் பெற முடியும். வாசிப்பு ஒரு இனத்திற்கோ, சமுகத்திற்கோ, வயதெல்லைக்கோ உரியது கிடையாது. சிறு வயதில் பழகும் போது "தொட்டில் பழக்கம் சுடு காடுவரை" என்ற

பழமொழி போல சிறுவயதில் ஆரம்பிக்கும் வாசிப்பு வாழ்க்கை முழுவதும் வழிகாட்டியாகத் தொடரும். ஒன்றைப்பற்றி அறிவதற்கான தேடல், ஆராய்தல் என்பனவே வாசிப்பிற்கான ஆரம்பப்படியாகும். வாசிப்பு மிகவும் மகிழ்ச்சிகரமானதும், சுவாரசியம் ஆனதும் ஆகும். இதனை ஆங்கிலத்தில் "Read for fun- Read for pleasure " என்பார்கள்.

வாசிப்பு, அறிவு திறனை பெருக்கி நாட்டில் நற் பிரசைகளை உருவாக்க பேருதவி புரிகிறது. எதையும் பகுத்தறிந்து கொள்ளும் ஒரு மனிதனால் மற்றவர்களைப் புரிந்துகொள்ளவும் தவறான வழிகளைத் தவிர்த்து நேர்வழியில் நடந்து கொள்ளவும் முடியும். இந் நவீன உலகில் அவர்கள் பாவிக்கப் போகும் இலத்திரனியல் ஊடகங்களின் தகவல்கள், இணைய செய்திகள், புலமை சார் இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் போன்றவற்றை வாசிப்பதற்கு பழகுவார்கள். அது மட்டுமன்றி சமுதாயத்தில் சிறந்த ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், சட்ட வல்லுனர்கள், அரசியல் அறிஞர்கள் என பல்வேறு துறைசார்ந்த நிபுணர்களை உருவாக்க முடியும். எழுத்தாற்றல் பற்றிய ஆய்வில் வாசிப்பு திறன் குறைந்தவர்கள் எழுத்தாற்றல் குறைந்தவர்களாகவே உள்ளனர் எனக் காட்டுகிறது.

தகவல் பெறுவதற்கு மிகவும் அவசியமானது வாசிப்பு ஆகும். வாசிப்பினால் கல்வி, வேலை, வினைத்திறமை உருவாகிறது. இதனால் இவர்கள் தம் திறமையை காட்டி, வேலைவாய்ப்பு பதவிஉயர்வு என்பவற்றை அடைய முடியும். வினைத் திறன் குறைவாக உள்ளவர்களால் திறமைகளை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்படும். இது அவர்களிடையே கோபம், பயம், விரக்தி, பொறாமை போன்ற உளவியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. வாசிப்பு தன்மை குறைவான ஒருவரால் கிரகிக்கும் தன்மை, அறிக்கை, செய்திகளை வாசித்து புரிந்து கொள்ள அதிக நேரத்தை செலவிட வேண்டிய நிலை போன்ற பின்னடைவுகளை ஏற்படுத்துகிறது..





புதிய விடயங்கள், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க, வெவ்வேறு நாடுகளின் பாரம்பரியங்கள், கலாச்சாரம், வாழ்வியல் முறைகளை அறிய வாசிப்பதால் முடிகிறது. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்திற்கு உறுதுணையாக இருந்து வாசிப்பை ஊக்கப்படுத்த வேண்டும். எம் நாளைய சந்ததிகள் அறிவியலில் வளர வாசிப்பை ஊக்கப்படுத்துவோம்.

# சிந்தனைக்கு சிறகு

எண்ணங்களின் திறவுகோல்
எழுத்துக்கள்தான் ஊன்றுகோல்
சிந்தனைக்கு
சிகரம் வைக்கும்!
சித்தத்தில் தெளிவு தரும்!
பண்பைப் புகட்டிவிடும்!
இருந்த இடத்திலேயே
இருந்துகொண்டே
உலகை சுற்றிவரும்
அறிவு வரும்!

கற்பனா உலகிற்கெம்மை
கதியிலே கொண்டு செல்லும்!
உயிருக்கு மிக நெருங்கிய
உறவொன்று
உண்மையிலேயே
இவ்வுலகில் உள்ளதென்றால்,
'புத்தகம்'தான் அதுவென்று
புத்தியில் ஏற்றிவைப்போம்!

மொழியோடெம்மை
இரண்டறக் கலப்பான்!
தீஞ்சுவை தருவான்!
கவலைகள் களைவான்!
உலகை
ஆனந்தமாக்குவான்!
உற்ற நண்பன்
புத்தகமே!
வாசித்துப் பார்!
சிந்தனைக்கு சிறகுகள்
முளைக்கும்!
நுண்மதி பெருக்கி
பெருநிறைவு தரும்!
வாசிப்பு வாழ்வின்
அங்கமாய் மாறும்.

எண்ணங்கள் சிதையாமல்
எடுத்தியம்பலாம்!
பண்டைய வரலாறு – அனைத்தும்
பகிரலாம்!
வாசிப்பு
வாழ்வின் தரத்தை
உயர்த்தும்!
நூல்கள் நூற்றாண்டு
பலநூறு நூற்றாண்டு
வாழும்!!



# முளைக்கும்

வாசிப்பு வாழ்க்கையை
வசந்தமாக்கும்!!
புத்தகம் புத்தியை
விளை நிலமாக்கும்!!

வாசிப்புக்கு
வயதெல்லை ஏது?
வாசித்துப்பார்!
நீயும்
இளமையாய் மாறுவாய்!
வாசிப்பு
நேசிப்பை வளர்க்கும்.

கேட்டுப்பார்!
சாதித்தோர், அறிஞர்
அறநெறி தவறாது
அகிலத்தில் இருப்போர் – அனைவரும்
வாசிப்பு தமது ஆசான் என்பர்
ஆதலால் தம் வாழ்வு சிறந்தது என்பர்

வாருங்கள் எல்லோரும்!
வாசிப்போம்!
வாசிப்பை நேசிப்போம்!

மொழியோடு உறவாடும்
ஊடகம்
வாசிப்பு!
வாருங்கள் எல்லோரும்!
வாசிப்போம்!
மொழியை
நேசிப்போம்!

சாதிக்கும் வெறியை
சிந்தையில் ஏற்றும்!
அழுமனக் கசடுகள்
காணாமல் போக்கும்!
வஞ்சம் வன்மம்
வாழ்வில் நுழையாமல்
நன்நூல்கள்
தடுக்கும்.

**-கார்த்திகை-**



# மனித உரிமைகளின் தற்கால நிலைமை

பாகம் – 3

மனித இனம் 10,000 ஆண்டுகளுக்கு முன் சமூகங்களாக ஓரிடத்தில் வாழத்தொடங்கிய காலத்திலிருந்து 99 வீதமான காலம் வரை, அது மனித உரிமை என்ற சொல்லையோ அதுபற்றிய தற்கால விளக்கத்தையோ பேசவில்லை என்பதை இத்தொடரின் முதலாம் பாகத்தில் பார்த்தோம். 1948 க்கு பின்புதான் இது ஐ.நா வால் பலமடங்கு விரிவாக்கப்பட்டு பலரும் பேசும் ஒரு பொது-புத்தி விடயமாக மாறியது என்பதை இத் தொடரின் இரண்டாவது பாகத்தில் பார்த்தோம். இப்பாகத்தில இது எவ்வாறு நடைமுறையில் தாக்கம் செலுத்தி வந்திருக்கிறது என்பதை பார்க்கலாம்.




தற்காலத்தில் மிகவும் அதிகமாக மீறப்பட்டுவரும் மனித உரிமைகள் எவை? சித்திரவதையே முன் வந்து நிற்கிறது. இதைத் தொடர்ந்து சட்டத்திற்கு அப்பால் செய்யப்படும் கைதுகளும் காணாமல் போதல்களும் இருக்கின்றன. அதிகமான சந்தர்ப்பங்களில் இம் மூன்று மீறல்களும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே இடம் பெறுகின்றன. ஐநாவில் ஏறக்குறைய 200 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. அதில் 170க்கும் மேற்பட்ட நாடுகள் சித்திரவதைக்கு எதிரான ஐ.நாவின் சாசனத்தை ஏற்று கையொப்பமிட்டுள்ளன. இருந்தும் 150க்கும் அதிகமான நாடுகள் சித்திரவதையை வழமையாக செய்கின்றன என்கிறார் சிக்காகோ பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரியின் எரிக் பொஸ்னர். சர்வதேச மன்னிப்பு சபையும் மனித உரிமை மீறல்கள் உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருவதாக சொல்கிறது. அதன் 'Global Torture Report" அதிர்ச்சியூட்டும் விபரங்களை தொகுத்து தருகிறது.

இவ்வாறு நிலமை இருந்தாலும் UDHR எனப்படும் சர்வதேச மனித உரிமை பிரகடனம் என்பது ஒரு மிகப் பெரிய தார்மீக சாதனை என்றே பலரும் கருதுகிறார்கள். ஆனால் மனித உரிமை மீறல்கள் அதி-கரித்து வருகிறது என்றால் எங்கோ பிழை இருக்கிறது என்றுதானே கருத வேண்டியிருக்கிறது. மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வரும் இக்காலத்தில் மனித உரிமைகள் என்ற சொல்லாடலும் கருத்தாடலும் அதிகரித்து வருவது ஏன் என்ற கேள்வியும் எழுகி


ந. மாலதி

றது. பூகோள மட்டத்தில் நாடுகள் இதை ஒரு தார்மீக பொறுப்பாக கருதாமல் இதை ஒரு தந்திரோபயமாக கையாள்வதே இதன் பிரதான பலவீனமாக உள்ளது. அதிகமான சந்தர்ப்பங்களில் மனித உரிமை மீறல்கள் கண்டிக்கப்படாமலே தவிர்க்கப்படுகின்றன. மனித உரிமைகள் பற்றி பேசும் மிகவும் அறியப்பட்ட மூவரின் வார்த்தைகளூடாக இதன் நிலைமையை மேலும் பார்ப்போம்.

உலகில் இன்று பொதுவெளியில் இயங்கும் அதிகம் அறியப்பட்ட அறிவுசீவி என்று விபரிக்கப்படும் இளைப்பாறிய பேராசிரியர் நோம் சொம்ஸ்கி மனித உரிமைகள் பற்றிய ஒரு கட்டுரையில் இவ்வாறு எழுதுகிறார்.

“தற்காலத்தில் மனித உரிமைகளின் நிலைமையைப் பார்க்க முதல், அதனுள் என்னவெல்லாம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்று பார்ப்பது நல்லது. இது சந்தேகமில்லாமல் மீண்டும் மீண்டு எழுகிறது. உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன் சர்வதேச மன்னிப்புசபை “வறுமையே உலகில் மோசமாக மீறப்படும் மனித உரிமை“ என்றது. அதே காலகட்டத்தில் ஐநாவின் உணவு அமைப்பு உலகில் பசியோடு வாழும் மக்களின் எண்ணிக்கை ஒரு பில்லியனுக்கும் அதிகமாகி விட்டது என்றது. அதே காலத்தில் பணக்கார நாடுகள் வங்கிகளுக்கு கைகொடுப்பதற்காக அதன் உணவு உதவிகளை குறைத்தன. ஒவ்வொரு நாளும் 10,000 சிறுவர்கள் பசியால் ஏற்பட்ட நோய்களால் இறக்கிறார்கள் என்றது ஒக்ஸ்பாம் அமைப்பு - ருவன்டாவில் 100 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டவர்களை விட இது அதிகம். இது ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடக்கிறது. அதிகரித்தும் வருகிறது. உலகின் மிகவும் பணக்கார நாடான அமெரிக்காவில், வைத்திய சேவை மனித உரிமையா என்று விவாதித்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரம் ஒவ்வொரு ஆண்டும் அங்கே 45,000 மக்கள் வைத்திய காப்புறுதி இல்லாமல் இறக்கிறார்கள். உலகிலேயே வைத்திய சேவை தேவைக்கேற்ப என்றில்லாமல் பணவசதியால் நிர்ணயிக்கப்படும் ஒரே நாடாக அமெரிக்கா இருக்கிறது. உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வகையான இறப்புக்கள் எல்லாம் பணக்கார நாடுகளின் செல்வத்தில் மிகச்சிறிய ஒரு பகுதியால் தடுக்கப்படலாம். இவர்கள் உயிர் வாழும் உரிமையை மனித உரிமையாக கருதுகிறார்களா என்பதே கேள்வி.

மனித உரிமைக்கு ஒரு அருமையான சாசனம் இருக்கிறது - ஐநாவின் சாசனமும் மனித உரிமை பிரகடனமும். ஐநாவின் சாசனம் மற்றவையை விட மோசமான சர்வதேச குற்றமாக போர் தொடுப்பதை விபரிக்கிறது. நடைமுறையில் ஐநாவின் இச்சாசனம் பல காலத்துக்கு முன்னரே மீறப்பட்டுவிட்டது.




உறுப்புரை 2(4) குப்பைத்தொட்டியில் போட்டாகி விட்டது. சர்வதேச சட்டம் பற்றிய ஆய்வுகளில் இதில் சொல்லப்படுவதை பலவிதமாக பொருள்கொடுத்து விபரிப்பார்கள். அமெரிக்கா போர் தொடுக்கும் போது ஒருவிதமாகவும் ரசியாவோ அல்லது சதாம் ஹசெயினோ போர் தொடுக்கும் போது வேறு விதமாகவும் பொருள் கொடுப்பார்கள்.“ இவ்வாறு தற்கால மனித உரிமை நிலைமையை கடுமையாக விமர்சிக்கிறார் நோம் சொம்ஸ்கி.

வேறொரு பேராசிரியர், லண்டனின் வெஸ்ட் மினிஸ்டர் பல்கலைக்கழகத்தில் சட்ட கல்லூரி பேராசிரியராக இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராதா டிசொய்சா, ஒரு நூலுக்கு அவர் எழுதிய “அறிதலில் அபசுரங்கள் கேட்கும் காலத்தில் நாம் வாழ்கிறோம்“ என்று தலைப்பிட்ட முன்னுரையில், மனித உரிமைகளின் தற்கால நிலைமையை இவ்வாறு அவர் விபரிக்கிறார்.

“பக்கத்து நாடான இந்தியாவின் உள்விவகார அமைச்சர் பழனியப்பன் சிதம்பரம் சிறிலங்காவின் தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளால் தூண்டப்பட்டு, இந்திய அரசும் தனது உள்நாட்டு கிளர்ச்சியாளர்களை “சிறிலங்கா தீர்வின்“ ஊடாக கையாளும் என்று அறிவித்து இந்தியாவின் பூர்வகுடிகள் நிலத்தில் “கிறீன் ஹன்ட் நடவடிக்கையை“ தொடக்கி வைத்தார். சிதம்பரம் “சிறிலங்கா தீர்வை“ பின்பற்றிய அதே காலத்தில், மேற்குலக ஊடகங்கள் கேர்னல் கடாபி தனது சொந்த மக்களை சுடுவது பற்றி உத்வேகத்துடன் செய்திகள் வெளியிட்டன. ஒரே கேள்வியை ஊடகங்கள் மீண்டும் மீண்டும் எழுப்பின - ஒரு நேர்மையான அரசு எவ்வாறு தனது சொந்த மக்களை சுடலாம்? நேட்டோ இராணுவ கூட்டு வெற்றிகரமாக லிபியாவை தாக்குவதற்கு இதுவே நியாயமாக முன்வைக்கப்பட்டது. அதே நேரம், இந்தியாவின் உள்விவகார அமைச்சர் இந்தியாவின் இராணுவத்தை சொந்த மக்கள் மீது ஏவியதற்கும் இதே போன்ற ஊடக கவனம் தேவை



யில்லை போலும். இவற்றையெல்லாம் நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்? அதாவது சில அரசுகள் தங்கள் சொந்த மக்கள் மீது போர் தொடுக்கலாம் ஆனால் வேறு சில அரசுகள் அவ்வாறு செய்வதை அனுமதிக்க முடியாது என்றா?

ஐ-அமெரிக்கா தொலைக்காட்சி CBS இல் 1996 டிசம்பர் 5ம் திகதி ஒரு நேர்காணல். நிகழ்ச்சி - 60 Minutes. நேர்காணல் எடுப்பவர் லெஸ்லி ஸ்டால். நேர்காணல் கொடுப்பவர் ஐ-அமெரிக்க வெளியுறவு செயலாளர் மடலின் ஆல்பிரைட். இராக்கின் மேல் தடைகள் போட்டதால் ஆயிரக்கணக்கான இராக்கி சிறுவர்கள் இறந்திருப்பது பற்றி அவரை கேட்டபோது அவர் சொன்ன பதிலிலிருந்து.

இராக்கின் மீதான அமெரிக்க தடைகள் பற்றி லெஸ்லி ஸ்டால், “அரை மில்லியன் சிறுவர்கள் இறந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அதாவது ஹிரோசிமாவில் இறந்த சிறுவர்களின் எண்ணிக்கையைவிட இது அதிகம். ஒரு நோக்கத்தை நிறைவேற்ற இத்துணை சிறுவர்கள் கொல்லப்படுவது இது சரிதானா?“

வெளியுறவுத்துறை செயலாளர், “இது ஒரு கடினமான தெரிவு ஆனால் அதற்கான விலை - அது சரிதான் என்று நாங்கள் நினைக்கிறோம்“.

இராக்கின் மீதான ஐநாவின் தடை ஆகஸ்ட் 1990 இல் - ஐநா, சிறுவர் உரிமைகள் சாசனத்தை 1989 நவம்பரில் பிரகடனப்படுத்தியதை தொடர்ந்து - போடப்பட்டது. ஐநா சிறுவர் உரிமைகள் சாசனம் ஒவ்வொரு சிறுவருக்குமான உயிர், உணவு தண்ணீர், கல்வி, ஆரோக்கியம், அடையாளம், சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு உரிமைகளை அங்கீகரிக்கிறது. இராக்கின் மீதான தடை தொடர சிறுவர்கள் அங்கு இறப்பதும் தொடர்ந்தது. ஐநாவில் சிறுவர் உரிமைகளை பற்றிய விவாதங்களும் தொடர்ந்தன. சிறுவர் உரிமைகள் சாசனம் சார்ந்த ஐ.நா அறிக்கைகளை தயாரிப்பதற்கான திட்டங்களும் விரிவாக்கப்பட்டன (1991). சிறுவர் தொழிலாளிகளும் இச்சாசனத்திற்குள் சேர்க்கப்பட்டனர் (1999). சிறுவர் போராளிகள் பற்றியும் (2000) சிறுவர் கடத்தல் பற்றியும் (2000) மேலதிக விதிமுறைகள் சேர்க்கப்பட்டன. இதே காலத்தில் ஐநாவின் மனித நேய உதவிகள் ஒருங்கிணைப்பாளர் டெனிஸ் ஹலிடே இராக்கில் 13 மாதங்களும் ஐநாவில் 30 ஆண்டுகளும் பணியாற்றியதை தொடர்ந்து பதவியிலிருந்து நீங்கினார்.

அப்போது அவர், “தண்ணீர மற்றும் துப்பரவு, போதிய உணவு, நல்ல வைத்திய வசதிகள் போன்றவை இல்லாமல் ஒவ்வொரு மாதமும் 4000 இலிருந்து 5000 வரையான சிறுவர்கள் இங்கு அவசியமில்லாமல் இறக்கிறார்கள்.“ என்றார்.

ஒட்டுமொத்த சமூகத்திற்கு உணவும் சுகாதாரமும் சேருவதை தடைசெய்தால் அங்கு சிறுவர்கள் இறப்பார்கள் என்பது பொதுப்புத்திக்கு தெரிந்தது தானே? இப்பொதுப்புத்தி ஏன் அருகிவிட்டது? சட்டப்புத்தகத்தில் மேன்மேலும் சட்டங்களை சேர்ப்பது அருகிவரும் பொதுப்புத்தியை ஈடுசெய்யுமா?

ஐநா சாசனம் - சுயநிர்ணயம் மற்றும் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பற்றிய அத்தியாயங்கள் உட்பட - எழுதப்பட்டுக்கொண்டிருந்த அதே காலப்பகுதியில், பாலஸ்தீன தேசம் காலனியாதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. ஐநா 1945 இல் உருவாகிய பின், இஸ்ரேலை உருவாக்குவதற்காக பாலஸ்தீனத்தை பிரிப்பதே அதனது முதல் நடவடிக்கையாக இருந்தது. 1948 இல் இஸ்ரேல் ஒருதலைப்பட்சமாக சுதந்திரத்தை பிரகடனப்படுத்தியது.

தொடர்ந்து பாலஸ்தீனர்களை பெரும்தொகையாக அவர்கள் தாயகத்திலிருந்து வெளியேற்றியது. அதே நேரத்தில் காலனியத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான கட்டமைப்புக்களை ஐநா அதன் சாசனத்தின் கீழ் உருவாக்கியது. 1948 இல் ஐநாவின் பாலஸ்தீனத்திற்கான பிரதி நிதியான சுவீடனை சேர்ந்த போக் பேர்னடொட் என்பவரை சியோனிச அமைப்பான LEHI கொலை செய்தது. அதே சியோனிச அமைப்பு 1949 ஏப்பிரலில் இல் Deir Yassin என்ற பாலஸ்தீனர்களின் படுகொலையையும் செய்தது. மே 1949 இல் இஸ்ரேல் ஐநாவில் அங்கத்துவம் பெற்றது. அப்போது இஸ்ரேல் அமைதியை விரும்பும் நாடு என்று விபரிக்கப்பட்டது. இவ்விபரங்கள் எல்லாம் எவரும் பார்க்ககூடிய பொதுவெளியில் கிடைக்கிறது. அவை பிழையாக விளங்கிக் கொள்ளப்படுவதற்கோ அல்லது முழுதாக புறந்தள்ளப்படுவதற்கோ அவை பொது வெளியில் கிடைக்கவில்லை என்பது மட்டும் காரணமல்ல."

ராதா டி சொய்சா எழுதிய "What is Wrong With Rights" என்ற நூலைப்பற்றி இறுதிப் பாகத்தில் மீண்டும் பார்ப்போம். இறுதியாக சிக்காகோ பல்கலைக்கழகத்தில் சர்வதே சட்ட வல்லுனராக பணிசெய்யும் பேராசிரியர் எரிக் பொஸ்னரின் "The Twilight of Human Rights Law" என்ற நூல் இக்கருத்தை மேலும் விளக்குகிறது. இவருடைய நூல் பற்றியும் இறுதி பாகத்தில் மேலும் பார்ப்போம்.

சுருக்கமாக அவர் சொல்லும் சில கருத்துக்கள் கீழே.

"நாடுகள் பவித்திரமாக மனித உரிமை சாசனங்களை ஏற்று ஒரு நீண்ட மனித உரிமை சாசனங்களின் பட்டியலில் கையொப்பமிடுகின்றன. இது பற்றிய உரைகளும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதும் அதிகரித்து வரும் அதே காலத்தில் இதன் மீறல்கள் பெரிதளவு குறைவதாக இல்லை. மனித உரிமை குற்றவாளிகளாக அறியப்பட்ட லிபியா, சவுதி அரேபியா, சுடான் போன்ற நாடுகள் மனித உரிமை கவுன்சிலில் இருந்திருக்கின்றன. ஆனால் பெரிதும் அறியப்பட்ட மனித உரிமை மீறும் நாடுகள் மட்டுமல்ல பிரேசில் நாடு சட்டத்திற்கு அப்பால் கொலை செய்வதை வழமையாக கொண்டிருக்கிறது. தென்ஆபிரிக்கா போராட்டக்காரர்கள் மீது வன்முறை செய்கிறது. இந்தியா சிறுவர் தொழிலாளர்களை ஏற்றுக்கொள்கிறது. ஐ-அமெரிக்கா சித்திரவதைகளை கையாளுகிறது.

மேலும், செப்டம்பர் 9/11 க்கு பின்னர் அமெரிக்கா சித்திரவதைகள் செய்வதும், ட்ரோன்கள் மூலம் கொலைகள் செய்வதும் அதற்கான மதிப்பை கெடுத்து விட்டது. அடிமைத்தனம் கூட இன்றும் முற்றாக அழிக்கப்படவில்லை.

இவ்வாறு மனித உரிமைகளின் தற்கால நிலைமையை விபரிப்பவர்கள் அதிகம் உள்ளார்கள். இவர்களுக்கு மையநீரோட்ட ஊடகங்களின் வெளிச்சம் கிடைப்பது மிகவும் அருமையாக உள்ளதால் உலக மக்கள் ஐநா பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் குழப்பத்திலேயே உள்ளார்கள். இது ஏன் என்பதை இத்தொடரின் இறுதி பாகமான பாகம்-4 இல் பார்ப்போம்.

European Parliament

## ஐரோப்பா - பாராளுமன்றம்

## ஸ்தாபிக்கப்பட்டது - 10. செப்டெம்பர் 1952





28 நாடுகளையும் 704 பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டது. புருஸல்ஸ்(பெல்ஜியம்) மற்றும் ஸ்ட்ராஸ்பேர்க்(பிரான்ஸ்) ஆகிய இடங்களில் தனது பாராளுமன்ற செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

# உயிர்ப்பு



## முள்ளிவாய்க்கால்

### அழுகுரல்கள் வானெழுந்தபோது புதிதாக கேட்ட மழலைக்குரல்.

**அது ஒரு பொல்லாத நாள். தமிழீழத் தமிழனின் ஒட்டு மொத்த அபிலாசைகளும் மண்ணுக்குள் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்த நாட்களில் ஒன்று. ஒரிரு கிலோ மீட்டர்களுக்குள் எங்களது வாழ்க்கை முடக்கப்பட்டு சிறீலங்காவின் சிங்கள பேய்கள் எம்மை கொன்று தின்ற நாட்களில் ஒன்று. வழமை போலவே அன்றும் அலன் மருத்துவமனை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.**

தமிழீழ விடுதலைப் போரியல் வரலாற்றின் இறுதியான விடுதலைப் புலிகளின் இராணுவ மருத்துவமனை என்ற வரலாற்று வகிபாகத்தைக் கொண்ட அந்த மருத்துவமனை வட்டுவாகல் பகுதியில் மருத்துவ போராளி அலனின் பொறுப்பாள்கையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது ஒரு இராணுவ மருத்துவமனையாக இருந்தாலும் கூட போராளிகள் மக்கள் என்ற எந்த பாகுபாடுமின்றிய பொது மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டு வந்தது. அப்போது உயிர் காத்தல் ஒன்று மட்டுமே தலையாய பணியாக்கப்பட்டிருந்தது.

ஒருபுறம் சாவுகளையும் , மறுபுறம் சிதறிக் கிடந்த காயப்பட்டவர்களின் கனதியையும் தாங்க முடியாது தகித்துக் கொண்டிருந்த மருத்துவமனையில் அந்த இறுதி நாட்களில் மருத்துவர் தணிகை, மருத்துவப் போராளி இசையருவி, மருத்துவப் போராளி உயர்ச்சி, மருத்துவப் போராளி சுகுமாரன் மற்றும் மருத்துவர் அலனுடன் அவரின் துணைவியான மருத்துவப் போராளி குலமகள் ஆகிய போராளிகள் தமது தமிழீழத்திற்கான மருத்துவப் பணியின் இறுதி வரலாற்றுப் பக்கங்களை எழுதிக் கொண்டிருக்கின்றார்கள்.

சுற்றிவர சிறீலங்காப்படைகளின் முற்றுகைக்குள் தமிழீழம் தகித்துக் கொண்டிருந்த போது தமது உயிரையும் துச்சமென மதித்த தமிழீழ மருத்துவர்களும் பலநூறு மருத்துவப் போராளிகளும் தமது மருத்துவக் கடமைகளை செய்து கொண்டிருந்தாலும், அலன் மருத்துவமனை என்று குறிப்பிடப்படும், நெய்தல் மருத்துவமனையே தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவமனைக் கட்டமைப்போடு அப்போது இறுதியாக இயங்கிக் கொண்டிருந்தது. மற்றைய மருத்துவமனைகள் யாவும் செயலிழந்து போன நிலையில் மருத்துவப் போராளிகள், மருத்துவர்கள் என அனைவரும் தம்மால் முடிந்த அளவுக்கு கிடைத்த இடத்தில் கிடைத்த பொருட்களை வைத்து தமது பணியை செய்து கொண்டிருந்தார்கள்.

அதே நேரம் மறுபுறத்தில் அரச மருத்துவர்களும் தமது கடமையை உறுதியாகச் செய்து கொண்டிருந்தார்கள். இறுதியாக முள்ளிவாய்க்கால் அரசினர் தமிழ்கலைவன் பாடசாலையில் இயங்கிய அரச மருத்துவமனை, இராணுவத்தின் முற்றுகைக்குட்பட்டு 15.05.2009 அன்று சிறீலங்காவின் ஆளுகைக்குள் வந்தது. அங்கே பணியாற்றிய அரச மருத்துவர்கள் சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டும், சுடப்பட்டு காயப்படுத்தப்பட்டும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்படும் வரை அவர்களது பணியும் அங்கே நிறைவாகவே இருந்தது.

அதன் பின்பு அரச மருத்துவமனையின் பணி இல்லாமல் போன நிலையில் நெய்தல் மருத்துவமனை மட்டுமே முற்றுமுழுவதுமான மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை நிலையமாக மாறிப் போனது.

ஊர் முழுக்க பிணக் குவியல்கள். திரும்பும் வீதிகள் எங்கும் காயப்பட்டவர்களின் ஓலங்கள். அந்த மருத்துவமனையை சுற்றி இருந்த நிலமெங்கும் அவலக் குரல்களும் சாவின் ஓலமும் இழுத்து புதைக்கப்படாத பிணத்தின் துர்நாற்றமும் என சொல்ல முடியாத அதி உச்ச வரலாற்று அவலத்தின் நாளாக அன்றைய நாள் உதித்தது. அதனோடு தமிழீழம் தன் மூத்த காவலன் ஒருவனையும் இழந்து தவித்த நாள். தமிழீழத்தின் மூத்த தளபதி பிரிகேடியர் சொர்ணம் அவர்கள் வீர காவியமாகிய கணப்பொழுது அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வந்த சேர்த்தார்கள் போராளிகள். அந்த மருத்துவமனை சத்திர சிகிச்சை கூடத்தில் அப் பெருமகனாரின் வித்துடலை மருத்துவர்கள் பரிசோதிக்கின்றார்கள். அவர் வீரச்சாவடைந்துவிட்டார் என்ற வரலாற்று சோகத்தை அந்த சத்திரசிகிச்சை கூடத்தின் மேசையில் தான் மருத்துவர் அலன் உறுதிப்படுத்துகிறார். தம் கண் முன்னே எங்கள் வீரத் தளபதி உயிரற்றுக் கிடந்த கோலத்தை பார்த்தவர்கள் அவருக்காக தலை குனிந்து அகம் நினைத்து ஒரு நிமிடம் விழிநீர் சொரிந்தார்கள். ஆனாலும் உடனடியாகவே தமது கடமையின் முக்கியத்தை உணர்ந்தவர்களாக அடுத்த சத்திர சிகிச்சைக்கு தயாரானார்கள்.

அழுது கொண்டிருப்பது போராளிக்கு நற்பண்பல்ல என்பதை அப் போராளிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் அவரது வித்துடலுக்கான மரியாதையை செலுத்திய மறுகணம் தம் கடமைகளை தொடர்ந்தார்கள்.

அப்போது ஒரு பெரும் இக்கட்டான சூழ்நிலை உருவாகின்றது. குழந்தை பிறப்புக்காக நிறை மாத கர்ப்பிணித் தாய் ஒருவரை ஒரு பெண் போராளி இவர்களது மருத்துவமனைக்கு கொண்டு வந்து விட்டுச் செல்கிறாள். ஆயிரமாயிரம் காயப்பட்டவர்களை ஆயிரமாயிரம் வேறு மருத்துவத் தேவைக்கானவர்களை உயிர் காத்து உன்னத பணி செய்த அவர்களுக்கு இம் மகப்பேறு ஒரு இக்கட்டான சூழ்நிலையை அப்போது உருவாக்கி இருந்தது.

மருத்துவர் தணிகை, மகப்பேற்று நிபுணர் மருத்துவக்கலாநிதி கெங்காதரன் அவர்களிடம் பயிற்சி மாணவனாக இருந்த போதும், அதன் பின்பான காலங்களில் மருத்துவராக பணியாற்றிய போதும் சரி அவருக்கு மகப்பேற்று சிகிச்சை அனுபவமும் பட்டறிவும் இருந்தது. ஆனாலும் ஒரு சிக்



கல் நிலை. சாதாரண மகப்பேறு என்றால் எந்த சிக்கல்களும் இல்லை. ஆனால், அந்த கர்ப்பிணித் தாய்க்கு சுகப்பிரசவம் இல்லாமல் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவானால் சிக்கல் நிறைந்துவிடும். அதற்கான உபகரணங்களான,

Sponge Holder, Towelclips, Blade handle, Mosquito forceps curved/straight, ARM forceps, Artery forceps long, Green Army Tage, Rectractor, Suckerhandle, Scissors curved/straight, Cord clamp, Tooth forceps - Non tooth, Alicès forceps, Needle holder (Dialator No 4-6 if necessary)


போன்றவையோ அல்லது அதற்கான தயார்ப்படுத்தல்களோ எதுவுமே அற்ற வெறுமையான சூழலில் அவர்கள் இருந்தார்கள்.

என்ன செய்யலாம் என்று யோசிப்பதற்கு முதலே " எம்மால் முடியும், நாம் செய்வோம் " என்ற முடிவுக்கு வந்திருந்தார்கள். ஒரு குழந்தை பிறப்புக்காக ஒரு தாய் காத்திருக்கும் போது, எவ்வளவு வலி என்றாலும் அதை சுகமான உணர்வாகத்தான் அந்த தாய் உணர்வாள். அவளுக்கான சிகிச்சைகளை மேற்கொள்ளும் மருத்துவர்களும் புன்னகையோடு சிரிப்பார்கள். ஆனால் இக் குழந்தை

பிறப்புக்காக அந்த தாய் வந்த போதே வழமை போலல்லாது " இந்த கொடுமையான உலகத்தில் எதுக்கு வந்து பிறக்கின்றாய் குழந்தையே " என்றே எண்ணம் அனைவருக்கும் வந்திருந்தது.

சிறீலங்கா எனும் பேரினவாதம் ஆடும் இனவழிப்புத் தாண்டவத்தின் உச்சக்கட்டத்தில் நாம் செத்துக்கொண்டிருக்கும் இந்த கொடுமையான பொழுதில் நீ ஏனடா வந்து உதிக்க போகிறாய் சிசுவே என்று அவர்கள் எண்ணினார்கள். மருத்துவர்களின் மனங்களில் அக் குழந்தை இந்த மண்ணில் எத்தனை காத தூரம் உயிரோடு வாழ இந்த சிறீலங் காப் பேய்கள் அனுமதிக்கப் போகின்றார்கள் என்ற வலி எழுந்தது. பல மாதங்களாக ஒழுங்கான உணவில்லாமல், ஒழுங்கான ஊட்டச்சத்தில்லாமல் குழந்தையை பெற்றெடுக்கப் போகும் அத்தாய் அக்குழந்தைக்கு பாலூட்ட முடியுமா? என்பது பெரும் அதிர்ச்சிக் கேள்வியாக கண் முன்னே எழுந்தது. அல்லது பிறந்த குழந்தைக்காகக் கொடுக்கக் கூடிய பால்மாவோ அல்லது சத்தூட்டமுள்ள எந்த உணவு வகைகளோ அப்போது யாரிடமும் இல்லை. அதனால் இக் குழந்தை பிறந்தவுடனே எவ்வாறு பசியாற்றப் போகிறாள் அத்தாய்? மருத்துவர்களுக்கு எழுந்த பெரும் மனக்குழப்பங்களுள் இதுவும் இருந்தது.

இருப்பினும் அவர்கள் அந்த வலியோடும் சிகிச்சைக்காக அத்தாயை உள்ளே எடுக்கின்றார்கள்.



அந்த மருத்துவமனைக் கட்டிடத்தின் சிறு அறை ஒன்றில் தங்கி இருந்த பெண் மருத்துவப் போராளிகளிடம் அத் தாயை ஒப்படைத்து அவர்களைப் பாதுகாக்கும் படி பணிக்கின்றார்கள் மருத்துவர் தணிகை மற்றும் அலன் ஆகியோர். மருத்துவர்களுக்கு சத்திர சிகிச்சைகளின் போது மருத்துவப் போராளி குலமகள் தன் கைக் குழந்தையைச் சேலையால் நெஞ்சோடு அணைத்துக் கட்டியபடி உதவி மருத்துவராக கடமையாற்றிக் கொண்டிருந்ததைப் போலவே இப்போதும் பணிக்குத் தயாரானார். அவருடன் இசையருவி மற்றும் எழில் ஆகிய பெண் போராளிகளும் அந்த குழந்தை பிறப்புக்கான ஏற்பாடுகளை கவனிக்கத் தொடங்கினர்.

மருத்துவர்களோடு உதவிக்கு நின்ற மருத்துவப் போராளிகள் ஓரிருவரே. அவர்களை அந்த தாய்க்கான மகப்பேற்றுக்கான சிகிச்சையில் ஈடுபடுத்தி விட்டு தம் கடமையைத் தொடர்ந்தார்கள் மருத்துவர்கள். வானம் எங்கும் புகை மண்டலம். தமிழீழத்தின் செவிப்புலனை கருவறுக்கும் பயங்கர பல்குழல், ஆட்லறி மற்றும் கிபிர் விமானத் தாக்குதல்களின் வெடிச்சத்தங்கள். தலை நிமிர்த்த முடியாத அளவுக்கு துப்பாக்கி ரவைகளின் தாக்குதல்கள். இவற்றுக்கு நடுவில் அந்த தாய் தன் குழந்தையை பெற்றெடுக்க காத்திருக்கின்றாள். அவளுக்கு உதவியாகப் பெண் மருத்துவப் போராளிகள், வேறு சிகிச்சைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் உடனடி சிகிச்சைகளை வழங்க தயாராக இரு தமிழீழ மருத்துவர்கள். அந்த மருத்துவமனை தனது வரலாற்றுப் பக்கம் ஒன்றை எழுதத் தயாராகிக் கிடந்தது. பல ஆயிரம் மக்கள் செத்துக்கொண்டிருந்த அந்த நிமிடத்தில் அந்தக் குழந்தை இந்த உலகத்தில் பாதம் பதிக்க காத்திருந்தது.

அவலக் குரல்கள் வானெழுந்து கொண்டிருந்த பொல்லாத பொழுதொன்றில் அப் பெண்ணின் இடுப்பெலும்பு வலியெடுக்கத் தொடங்கியது. பிரசவத்துக்கான அறிகுறிகள். ஓவென்று கத்தி அழுது கொண்டிருக்கும் அத் தாயின் அவலக்குரல் என்று அந்த பிரதேசமே அந்தரித்துக் கொண்டிருக்க, அலன் மருத்துவமனை தன் வரலாற்றில் இறுதிப் பக்கத்தில் ஒரு உண்மையை பதிவாக்கிக் கொண்டது. அழுகுரல்கள் வானெழுந்த பொழுதொன்றில் மழலைக்குரல் ஒன்று பசியில் கத்தியபடி தமிழீழத் தாய் நிலத்தில் தன் வருகையை பதிந்து கொண்டது. பல லட்சம் அவலக்குரல்களுக்கு மத்தியில் அக் குழந்தையின் மழலைக்குரல் வானெழுந்தது.

தம்மால் முடிந்த அளவுக்கு குழந்தைக்கான அல்லது அத் தாய்க்குத் தேவையான விடயங்களை கவனித்துக் கொண்ட அம்மருத்துவ அணி அந்த



இளம் தாயைக் குழந்தையோடு முடிந்த அளவுக்கு பாதுகாத்து வைத்திருந்தார்கள். ஆனாலும் அந்த தாய் சாதாரண நிலைக்கு திரும்பிய உடனேயே தன் குழந்தையை அணைத்து மகிழ்ந்தபடி முத்தமிட்டுக் கொள்கிறாள். தமிழினத்தின் ஒரு மாபெரும் வீரத் தளபதியை இழந்து தவித்துக் கொண்டிருந்த அந்த மருத்துவமனை, அதே புனிதனின் வித்துடல் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு மிக அருகிலேயே ஒரு உயிரைப் பெற்றெடுத்த தன் வரலாற்றைப் பதிவு செய்தது.

**எழுதியது: இ.இ. கவிமகன்**

**தகவல்: மருத்துவர் தணிகை**

**மருத்துவர் அலன்**

**மருத்துவப்போராளி குலமகள்**

**ஒப்புநோக்கியது : மஞ்சு மோகன்**

**நாள்: 20.07.2021**

முக்கிய குறிப்பு: இந்த இறுதி மருத்துவமனையில் பணியாற்றிய பல மருத்துவர்கள் மற்றும் மருத்துவ போராளிகளது பெயர்களை நடைமுறையில் இருக்கும் சூழல் காரணமாக குறிக்க முடியாததுக்கு வருந்துகிறோம்.

# ஆறுமுக நாவலர்

(டிசம்பர் 18, 1822 – டிசம்பர் 5, 1879)

தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணம், நல்லூரில் தோன்றியவர். தமிழ் நூல்களை முதன் முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித்தவர். திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.






ஆறுமுக நாவலரின் நினைவாக இலங்கை அரசு 1971 அக்டோபர் 29 இல் நினைவு அஞ்சல்தலை ஒன்றை வெளியிட்டது.

# கைகளுக்குள் சிறைப்பட்ட காகிதங்களை நேசிப்போம்!!



## எழுத்துக்கள் உயிர் பெற்று வாழ்வது வாசிப்பவரும் நேசிப்பவரும் உள்ள வரையே....

இன்றைய விஞ்ஞான உலகில் சமூக வலைத் தளங்களின் ஆதிக்கத்தால் நூல் வாசிப்பு மரபுகள் மாறிவருகின்றன. திறன்பேசி வழியாக நிகழ் கலைப்புத்தகங்கள், மின்னூலக வாசித்தல், ஒலிப் புத்தகம், வலையொளி செய்திகள், காணொளி வழி கற்றல் என்ற மாறுபட்ட வாழ்வால், விஞ்ஞான வளர்ச்சியால், வீட்டுக்கொரு நூலகம் என்பதையும் புத்தகங்களை கையில் எடுத்து வாசிக்க வேண்டும் என்பதையும் இன்றைய உலகத்தில் பலர் அடியோடு மறந்து விட்டனர். இன்றைய தலைமுறையினர் பலர் நூலகம் செல்வதை வழக்கமாக வைத்துக் கொள்ள



முடியவில்லை என்பதே வேதனைக்குரிய விடயமாக உள்ளது. புத்தகங்கள் வாசிப்பு பற்றிய அருமை பெருமைகளை பலபேர் அறிந்து கொள்ளக் கூட தயாராக இல்லை. நூலகங்களின் தேவைகள் பற்றியும் யாரும் புரிந்து கொள்ளவும் இல்லை. தெரிந்து கொள்ளவும் இல்லை.

நூல்கள் நூற்றாண்டுகளை தாண்டி வாழும் காவியங்கள். எழுத்தின் பெருமையும் நூலின் அருமையையும், "எழுத்தும் ஓலையும் இணைந்த எழுத்தோலையும், ஓலைக் கணக்கரையும் அவர் காலை முதலாக மாலை ஈறாகக் கணக்கெழுதும்" காட்சியை நாலடியார் உணர்த்துகின்றது. பண்டைத் தமிழரின் வரலாறு வாளோடு மட்டுமல்லாமல் பேனாவோடும் கலந்தது. எழுத்துக்கள் வடிக்க ஏது இடம்? இன்றைய நவீன அறிவியல் உலகில் வலைத்தளமும், கைபேசிகளும், மின்னஞ்சலும், மின் ஊடகங்களும் முக்கியமாக தொலைக் காட்சியும், மக்களின் புத்தகம் படிக்கும் பழக்கத்தை புதைத்துவிட்டன. எழுத்துக்களின் முதல் பதிவு, குகைச் சுவர்களிலும், இஷாங்கோ எலும்புகளிலும் தான். இவை சுமார் 37,000 ஆண்டுகளுக்கு முன்பே, நிகழ்ந்து விட்டன. பின்னர் களிமண் கலவைகளிலும், பாப்பிரஸ் மரப்பட்டைகளிலும், ஆட்டின் தோலிலும்

## மனிதனை நெறிப்படுத்தவும் வழிநடத்தவும் சிறந்த வழிகாட்டியாகவும் தோழனாகவும் திகழ்வது புத்தகமே

எழுதப்பட்டன. அவை அனைத்துமே புத்தகங்கள்தான் வரலாற்றுப் பதிவுகள்தான். எழுதினான் தமிழன். பாறைகளில், பனையோலைகளில், எழுதுதாள் தோன்று முன் எழுத்தோலைகளில் எழுதினான். இன்று அருங்காட்சியகத்தில் அடுக்கி வைக்கப் பட்டுள்ள ஓலைச்சுவடிகள் கூறும் அரிய தமிழர் நூற்றாண்டு பழமைகளையும் புதுமைகளையும் புத்தகங்களுடனான உறவு என்பது ஆயுள் வரை தொடர்கின்றது. எவ்வளவுதான் தொழில்நுட்பம் உச்சத்தை எட்டினாலும் அறிவுப் பொக்கிஷத்தைப் படிக்கும் பழக்கத்துக்கு ஈடு இணை எதுவுமில்லை.

புத்தகங்கள் மனிதர்களை மெருகேற்றுகின்றது. ஆதலால் தான் மீண்டும் மீண்டும் படிக்கிறார்கள். ஒவ்வொரு மானுடனின் உள்ளும் உருவாகும் புதுஅகம் தான் புத்தகம். சுற்றத்தில் மாற்றம் வேண்டுமெனில் முதலில் அகமாற்றம் வேண்டும். அக மாற்றத்தைத் தருவது புத்தகமே. ஒவ்வோர் வாழ்வை மாற்றுவதும் முன்னேற்றுவதும் புத்தகமே. உடல் வலுப்பெற எவ்வாறு உடற்பயிற்சி இன்றியமையாத ஒன்றாக உள்ளதோ அதேபோல் மனது வலிமையடைய புத்தகங்கள் இன்றியமையாதவை.




புத்தகங்கள் இல்லாத அறையை உயிரற்ற உடலுக்கு ஒப்பாக கூறுவதுண்டு. மனிதனை நெறிப்படுத்தவும் வழிநடத்தவும் சிறந்த வழிகாட்டியாகவும் தோழனாகவும் திகழ்வது புத்தகமே என்று பலர் கூறுவதுண்டு. பேச்சிலிருந்து தான் புத்தகங்கள் உருவாகுகின்றன ஆனால் புத்தகங்களே பேச்சை வாழ வைக்கின்றன. இவ்வாறாக புத்தகங்களின் பெருமைகள் நீண்டுகொண்டே போகின்றன. விதைக்குள் ஒளிந்திருக்கும் விருட்சம் போல எண்ணிலடங்கா விடயங்களையும் உணர்வுகளையும் கற்பனைகளையும் கதைகளையும் புத்தகங்கள் தாங்கி நிற்கின்றன. இவ்வாறாக ஓராயிரம் தகவல்களை தன்னுள் புதைத்து வைத்துள்ளது புத்தகம். "துப்பாக்கியில் இருந்து வெளியேறும் ஒரு தோட்டாவை விட வீரியமான ஆயுதம் புத்தகம்" என்பார் மார்ட்டின் லூதர் கிங்.

அறிவை வளர்க்க அணுகும் பாடசாலைகள் குருவாக, கல்வி அறிவைப் புகட்டும் பள்ளி ஆசானுக்கு அடுத்த இடத்தில் இருப்பவை புத்தகங்களே. இன்றளவில் வாழ்க்கையில் சிகரம் தொட்டு சாதனைகள் பல பெற்று சாதனையாளர்களாக வலம் வருவோரின் வரலாறு புத்தகமாக பதிவாகின்றது. ஆனால் அனைவரும் சிந்திக்க தவறிய ஒரு விடயம் சாதனையாளர்களை சாதிக்கத் தூண்டியதும் கைதூக்கி விட்டதும் புத்தகங்களாகவே இருக்கின்றன. இவ்வளவு சிறப்பும் பெருமையும் வாய்ந்த புத்தகங்கள் சமீபகாலமாக பலரால் ஒதுக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வருகின்றது என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. அதுமட்டுமல்லாமல் இன்றைய விஞ்ஞான உலகில் இளைய தலைமுறைகளிடம் புத்தக வாசிப்பு என்பது குறைந்துவிட்டது என்கின்றது மற்றுமொரு கணிப்பு. திறன்பேசியில் உலகத்தை கையில் அடக்கிவிட்ட இந்த யுகத்தில் ஏனோ புத்தகங்களும் அதில் அடங்கி விட்டன. வாசிப்புப் பழக்கம் மட்டும் ஏனோ இன்னும் தொலையாமல் கையில் அடக்கப்பட்ட புத்தகங்களை சிலர் வாசித்த வண்ணமே உள்ளனர்.

புத்தகங்கள் இல்லை என்றால் சரித்திரம் மௌனமாகிவிடும். புத்தகங்கள் படிப்பதை வழக்கமாகக் கொள்ளவேண்டும்.

"கலை இலக்கியப் படைப்புகள் மக்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும். பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்களது மனதில் புரட்சிகரப்பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்". என்றார் தன்னிகரற்ற தலைவன் மேதகு வே.பிரபாகரன். வாசிப்புப் பற்றி பின் வருமாறு கூறினார்.

"வாசிப்புப் பழக்கம் என்பது சிறு வயதிலிருந்தே எனக்கு பிடித்தமான ஒரு விடயம். அதிலும் புத்தகங்களில் நல்ல விடயத்தை காணும்போது அதை யாருக்காவது வாசித்துக் காட்டுவதை வழக்கமாக கொண்டிருப்பேன். ஆனால் புத்தகம் படிக்கும் ஆர்வத்தில் பல்வேறு புத்தகங்களை நான் எடுத்துச் செல்வேன். பரபரப்பான வாழ்க்கை முறையிலும் அழுத்தங்கள் காரணமாகவும் வாசிக்க முடியாது போவதுமுண்டு."

தேசிய தலைவர் தனதுவேண்டுகோளாக இன்றைய சந்ததியின் புத்தகம் வாசிக்கும் பழக்கம் தூண்டப்பட வேண்டும் என்றார். திறமையான படைப்புகளை படைத்தாலும் அது சரியாகப் போய்ச் சேர வேண்டும் என்பது மிகவும் முக்கியமான ஒரு விடயம். வாசிப்புப் பழக்கத்தில் அவர் படித்த நூல்களாக சரித்திர நாவல்கள், சுதந்திரப் போராட்ட வீரர் வாழ்க்கை வரலாறுகள், சேகுவேராவின் வரலாறு, கியூபா போராட்ட வரலாறு, கல்லுக்குள் ஈரம் மற்றும் பல்வேறு விதமான புத்தகங்களைப் படித்ததாக அவர் கூறியிருந்தார் அதிலும் கல்லுக்குள் ஈரம் எனும் புத்தகத்தை ஐந்து முறை படித்ததாக அவர் பெருமையுடன் கூறியதுண்டு. ஒரு சமூகத்தை கட்டமைப்பதில், மிகப்பெரிய மனிதர்களை உருவாக்குவதில், நமக்குள் புது புது தேடல்கள் செய்ய நூல்கள் உதவும். சிந்திக்க மறுக்கிற சமூகம் என யாரையும் முத்திரை குத்துவதற்கு முன் அந்த சமூகத்தை சிந்திக்க வைக்கும் நூல்கள் சார்ந்து அவர்களை திசை திருப்ப வேண்டிய பொறுப்புணர்வு எல்லாருக்கும் உண்டு.

"நான் யாரை தலைசிறந்த நண்பன் என்று கருதுகிறேன் என்றால் யார் எனக்கு நான் இன்னும் படிக்காத ஒரு நல்ல புத்தகத்தை வாங்கி தருகிறானோ அவன் தான்" என்றார் ஆபிரகாம் லிங்கன். அமெரிக்காவில் ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்து உலகம் போற்றும் தலை சிறந்த தலைவனாக உயர்ந்தவர். புத்தகங்களைப் படித்தே உச்சத்தைத் தொட்டார். புத்தகங்களையே உயிராகக் கருதியவர். அவர் படித்த "ஜார்ஜ் வாஷிங்டன்" என்ற புத்தகமே அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வேண்டும் என்ற எண்ணத்தை அவருள் விதைத்தது. மானிடனை சிறந்த மனிதனாக மாற்றுவது புத்தகமே. அத்தகைய புத்தகத்தை தனது உற்ற நண்பனாக ஏற்றுக் கொண்டவர். அடிமைகளின் சூரியனாம் ஆபிரகாம் லிங்கனை அமெரிக்க குடியரசு தலைவனென்று ஆக்கி உயர்த்தியதும் புத்தகமே!!!



**"புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டின்**
**புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"**

என்றார் பாரதி தாசன். ஆம்! ஒவ்வொரு வீட்டிலும் புத்தகக் குவியல் வேண்டும். வாழ்க்கையை மாற்றும் அரிய புத்தகங்கள் ஒவ்வொருநாளின் அங்கமாக உருவாக வேண்டும். புத்தகத்தை கையில் ஏந்திப் படிக்கும் போது ஒரு மனிதனின் அகக்கண்களும் புறக் கண்களும் முழுமைபெறுகின்றன. நாம் யார் என்பதை நமக்கும் உலகிற்கும் எடுத்துக் காட்டும் அற்புதம் தான் புத்தகம்..

மகாத்மா காந்தி மேற்கொண்ட அகிம்சை, சத்தியாகிரகம் ஒத்துழையாமை எல்லாம் அவர் புத்தகப் படிப்பு வழியாக பெற்றவையே. ஆங்கிலேயரான ஜான் ரஸ்கின் எழுதிய "கடையனுக்கும் கடைத் தேற்றம்" ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஜான் ரஸ்கின் புத்தகத்தை படித்தது மட்டுமல்லாமல் அதை அவர் குஜராத்தி மொழியில் மொழிபெயர்த்தார். டேவிட் தோரோ என்ற அமெரிக்கர் ஆங்கிலத்தில் எழுதியது ஒத்துழையாமை கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. ரஷிய ஞானி லியோ டால்ஸ்டாய் ரஷ்ய மொழியில் எழுதிய "இறைவன் சாம்ராஜ்ஜியம் உங்களுக்குள்ளே இருக்கிறது" என்ற புத்தகங்களே அவரை ஒரு தேசத் தந்தையாகவும் அகிம்சாவாதியாகவும் மாற்றியது.

தூக்கு மேடையை முத்தமிடும் வரை படித்தவர் உமர் முஸ்தர். தூக்கு மேடை ஏறும் முன்பு வரை வாசித்துக் கொண்டே இருந்தவர் புரட்சியாளர் பகத்சிங். "சாகப்போகிறோம் என்றாகிவிட்டது இந்த நேரத்தில் புத்தகம் எதற்கு" என்று அவரிடம் கேட்டதற்கு, "சாகும்போது முட்டாளாகச் சாக எனக்கு விருப்பமில்லை. எதையாவது கற்றுக்கொண் டோம் என்ற திருப்தி இருக்க வேண்டும்" என்று புன்னகைத்தவாறே பதிலளித்தார் பகத்சிங்.

"புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே!" என்றார் லெனின். யுகப் புரட்சி நாயகன் ஒரு புரட்சியாளராகவும் முக்கிய அரசியல் தலைவராக இருந்த போதிலும் அவரது புரட்சிகரமான எழுத்துக்கள் மூலம் கணிசமான அளவுக்கு மக்கள் மனங்களில் ஒரு இடத்தைப்

**ஒவ்வொரு மனிதனும் சிறப்பாக வாழ வேண்டுமெனில் மனது வலுவாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். இதைத் தருவது புத்தக வாசிப்பு தான்**

பெற்றிருந்தார். வாசிப்பின் அவசியம் உணர்ந்ததால்தான் நஞ்சு தன் கழுத்தை தொடும்போது கூட கிரேக்க நாட்டு கவிதைகளை படித்து கொண்டிருந்தார் சார்க்கிரட்ஸ். இவ்வாறு புத்தகங்கள் பல சாதனையாளர்களையும் புரட்சியாளர்களையும் உருவாக்கியுள்ளது. நூலகத்தில் குவிந்து கிடக்கும் புத்தகங்களில் இருப்பது வாழ்வில் நிமிர்ந்து நின்றவர்களின் வரலாறு.

**"நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்"**

என்று கூறி சரித்திரம் படைத்த சரித்திர நாயகன் டாக்டர் அப்துல்கலாம். வரிகளை மட்டுமல்ல கலாம்



விதைகளும் விதைத்துச் சென்றுள்ளார். கலாம் பற்றி அனைவரும் அறிந்ததே. அவர் சிறந்த விஞ்ஞானி மட்டுமல்ல தலைசிறந்த எழுத்தாளரும் கூட. ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை வாசித்தவர். தனது உடைமையாக புத்தகங்களை மட்டுமே விட்டுச்சென்றவர். உயரிய பதவியான குடியரசுத் தலைவர் மகுடத்தை சூடிய போதும் உயிர்மூச்சாக அவர் வாசித்ததும் நேசித்ததும் புத்தகங்களையே. அவருடைய புத்தகங்களும் வரிகளும் பல்லாயிரம் இளைஞர்களின் மனதில் எழுச்சிதனை விதைத்தது.

ஒவ்வொரு மனிதனும் சிறப்பாக வாழ வேண்டுமெனில் மனது வலுவாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். இதைத் தருவது புத்தக வாசிப்பு தான் எனவே தான், "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்றார் ஔவையார். புதிய உலகைப் படைக்கும் ஆற்றல் புத்தகங்களுக்கு மட்டுமே உள்ளன. "சில புத்தகங்களை சுவைப்போம், சிலவற்றை அப்படியே விழுங்குவோம், சில புத்தகங்களையும் மென்று ஜீரணிப்போம்" என்றார் பிரான்சிஸ் பேக்கன். வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதன் மூலம் இன்றைய தலைமுறையினர் நாளைய தலைவர்களாக உருவாக முடியும்.

புத்தகங்கள் கடுகளவு கிடைத்த காலத்தே பல அறிஞர்கள் உருவாகினாலும் போதிய நூல்கள் இல்லை. இன்றோ நூல்கள் ஏராளமாக இருப்பினும் வாசிக்கத்தான் யாரும் இல்லை. புத்தகம் வாசிப்பதன் மூலம் ஒருவரின் சிந்தனைத்திறன் மேலோங்கும், சொல்வளம் கற்பனை வளம் பெருகும். ஒவ்வொருவரின் வாழ்வையும் அர்த்தமுள்ளதாக மாற்ற கீச்சகம் முகநூலில் புதைந்து கிடக்காமல் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவோம். புத்தகத்தை நேசித்து வாசித்தால் அதன் கருத்துக்களை நாம் சுவாசிக்கலாம். புலரும் பொழுது புத்தகத்துடன் விடிந்தால் வாழ்வு பிரகாசிக்கும். வாசிப்பதன் மூலம் மனம் தெளிவு பெறும், எழுத்துப்பிழைகள் நீங்கும், புதிய செய்திகளை அறியலாம், வரலாற்றை தெரிந்து கொள்ளலாம், விவாதத்திறன் மற்றும் சிந்தனை மேம்படும், பகுத்தறிவை வளர்க்கும், மொழிப் பற்றை வளர்க்கும், படைப்பாளுமை மீது ஆர்வத்தை ஏற்படுத்தும், தன்னம்பிக்கையை அதிகரிக்கும். அறிவின் ஒளி நம் மனதின் சக்தியை அதிகரிக்கிறது, மற்றும் அதன் நோக்கத்தை விரிவுபடுத்துகிறது. வாசிப்பு நம் மூளையின் வலது பக்கத்தைத் தூண்டுவதன் மூலம் நம் கற்பனையை விரிவுபடுத்துகிறது. இது புதிய சாத்தியங்கள் மற்றும் புதிய யோசனைகளுக்கு நம் மனதைத் திறக்கிறது, மற்றவர்களின் வாழ்க்கையின் மூலம் உலகை அனுபவிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் உதவுகிறது.

## வாசிப்பு உங்கள் சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்துகிறது

புதிய சொற்களை தொடர்ந்து வெளிப்படுத்துவது, அவற்றின் அர்த்தங்களைக் கற்றுக்கொள்வது மற்றும் அவை பயன்படுத்தப்படும் சூழலைப் பார்ப்பது உங்கள் மன அகராதியை அதிகரிக்கும். உங்க-ளிடம் பயன்படுத்த அதிக சொற்கள் கிடைக்கின்றன. மேலும் உரையாடலிலும் எழுத்திலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான கூடுதல் வழிகள் உள்ளன.

தொடர்ந்து அதிகமான புத்தகங்களைப் படிப்பதன் மூலம் காலப்போக்கில் உங்கள் பகுப்பாய்வு சிந்-தனை திறனை வளர்த்துக் கொள்ளலாம். வாசிப்பு உங்கள் மூளையைத் தூண்டுகிறது, புதிய வழிக-ளில் சிந்திக்க உங்களை அனுமதிக்கிறது. நீங்கள் படிப்பதில் தீவிரமாக ஈடுபடுவது கேள்விகளைக் கேட்கவும், வெவ்வேறு கண்ணோட்டங்களைக் காணவும், வடிவங்களை அடையாளம் காணவும், இணைப்புகளை உருவாக்கவும் உங்களை அனுமதி க்கிறது.

நமக்காக உலகத்தைத் திறக்க புத்தகங்கள் உள்ளன. எங்கள் சொந்த சூழலில் இருந்து எங்களை வெளியே அழைத்துச் செல்வதற்கும், மற்றவர்களின் உண்மைகளை எங்களுக்குக் காண்பிப்பதற்கும். சில புத்தகங்களுக்கு உங்கள் மனதையும் கண்ணோ ட்டத்தையும் முழுமையாக மாற்றும் சக்தி உள்ளது.

இவ்வாறாக விருட்சத்தை போல பல நன்மைகளை புத்தகங்கள் நமக்குத் தருகின்றன. "ஓதுவது ஒழி-யேல்" என்கிறது ஆத்திச்சூடி. ஒருபோதும் படிக்கும் பழக்கத்தை கை விடாதே. நல்ல நூல்களைத் தேடித் தேடிப் படித்து கொண்டே இரு. விஞ்ஞான வளர்ச்சி, ஊடகங்களின் தாக்கம் என்று பல்வேறு காரண ங்களால் இன்று புத்தக வாசிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. மாணவர்களும், இளைஞர்களும், முதிய-வர்களும் கூட தங்களது பெரும்பாலான நேரத்தை ஸ்மார்ட் போனுடன் செலவிடுகின்றனர். ஊடகங்க-ளின் மூலம் உலகில் நடக்கும் நிகழ்வுகள் ஓரிரு நிமி டங்களில் தங்களது விரல் நுனிகளில் கிடைத்து விடுகிறது என்பது உண்மை. எனினும், புத்தகங்-களை வாசிப்பதற்கும் ஊடகங்களின் மூலம் வாசிப்-பதற்கும் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன.

படைப்பாளிகள் தங்களது படைப்புகளை வெளி யிட பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர். இத னால், புத்தகங்களை வெளியிடுபவர்களின் எண்ணி-க்கையும் குறைந்து கொண்டு செல்கிறது. புத்தங்கள் என்பது பலருக்கு விடியற்காலையில் பூபாளமாகவும், இரவு நேரத்தில் தூக்க மாத்திரைகளை போலவும் மாறிவிட்டது. படுக்கைக்கு முன் ஒரு புத்தகத்தைப் படிப்பது மன அழுத்தத்தைக் குறைப்பதாக இருப்-பதால், அது வேகமாக தூங்கவும் உதவும்.

**புத்தக வாசிப்பு என்பது ஓடும் நதியைப்போன்றது. ஒரு புத்தகம் இன்னொரு புத்தகத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும்.**

மேலும், உங்கள் மூளையை புதிய தகவல்கள் அல்லது வேறொருவரின் கதையுடன் திசை திருப்பு-வதன் மூலம், அது உங்கள் மனதை உங்கள் சொந்த தொல்லைகளிலிருந்து அகற்றும். புத்தகங்களை வாசித்துக்கொண்டே தூங்க பழகிய நாம் இன்று தொலைக்காட்சியிலும், ஸ்மார்ட்போன்களிலும் நம்மை இழந்து தவித்து வருகின்றோம். அடுத்த தலைமுறை புத்தகம் அறியாத்தலைமுறை என்ற அவச்சொல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டி யது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். புத்தகங்களை பரிசளிப்போம், அலைபேசியை தள்ளி வைப்போம், அறியாததை அறிந்து கொள்ள சொல்லி வைப்போம். வாசிக்க கற்றுக் கொடுப்போம், வாசிப்பை வளர்ப்போம். தேடுதல் இன்றி வாழ்க்கை யில் எந்த உச்சமும் கிடைத்துவிடுவதில்லை. அப்ப-டிப்பட்ட தேடுதலின் ஆரம்பப்புள்ளியே புத்தகம்தான். புத்தக வாசிப்பு என்பது ஓடும் நதியைப்போன்றது. ஒரு புத்தகம் இன்னொரு புத்தகத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

மனதை செதுக்கும் உளி

சரித்திரத்தை காட்டும் ஓவியம்

எண்ணங்களின் வடிவம்

பக்கங்கள் ஒரு அனுபவம்

பழகிப்பார் நீ அனுதினம்

அறிவுப்பசியின் விருந்து

தனிமைக்கு ஒரு இனிமை

நேரத்தை நேர்த்தி செய்யும் விசைத்தறி

நடைபயிலும் குழந்தையின் நம்பிக்கை

படைத்தவனின் நினைவகம்

ஆதலால்

காதல் செய் புத்தகங்களை

தினம் சுவாசி வாசிப்பை.....


- வானிலா -

# ரமாபாய்



1858 ஆம் ஆண்டு கர்நாடகாவில் ஒரு பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்து, பார்ப்பனீயத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து, சூத்திரன் என்று சொல்லப்பட்ட ஓர் இளைஞனைக் கைப்பிடித்து, வடநாடு முழுவதும் சுற்றித் திரிந்து, பெண்கல்வி, பெண்விடுதலைக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் ரமாபாய். 20 ஆவது வயதில் தன் பெற்றோரையும், 25 ஆவது வயதில் தன் கணவனையும் இழந்த பின்னும், நெஞ்சில் துணிவை இழக்காமல், அதற்குப் பிறகு 40 ஆண்டுகள் தன் இலட்சியத்திற்காகப் போராடி மறைந்தவர் அவர்.

ரிப்பன் பிரபுவுக்கு முன்னால் அவர் பெண் கல்வி குறித்து ஆற்றிய உரையால் ஈர்க்கப்பட்டு, இங்கிலாந்தும் அமெரிக்காவும் அவரை அரவணைத்தன.




அவர் இந்தியாவில் கணவனை இழந்த இளம் பெண்களுக்காக ஓர் இல்லம் நிறுவி, அவர்களுக்குக் கல்வி கொடுத்து, ஊக்கம் கொடுத்து, அவர்களைச் சுயமரியாதையோடு வாழ வைத்தார். ஆனால் இவையெல்லாம், இந்துமதத்திற்கு எதிரானவை என்று கூறி திலகர் அவரைக் கண்டித்தார்.

நமக்கெல்லாம் திலகரைத்தான் தெரியும்.

ரமாபாயைத் தெரியாது!

# மொழி

மொழியே மொழிக்கு மையம்

மொழி மனித மனத்தின் அறிதல்

அறிதல் வளர மொழி வளர்கிறது

மொழி மாந்த அறிவுநிலையின் அடையாளம்

மொழி கருத்துப்பழவிற்கு வழிகாட்டி

மொழி தகவல் கருவி

எண்ணத்தை எடுத்தியம்ப

மொழி அகத்தியமாகிறது!



சிறுகதை

# பவம் பவானி சகிதம் நமாமி



- அஜந்தி -

"கற்பூர கௌரம் கருணாவதாரம்
சம்சார சாரம் புஜகேந்திர வதாரம்
சதா வசந்தம் ஹ்ருதயாரவிந்தே
பவம் பவானி சகிதம் நமாமி"

கண் மூடி நின்று மனமுருகிப் பாடிய பெரியவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நிற்கிறாள் அந்தப் பத்து வயதுச் சிறுமி.
ஒவ்வொரு வெள்ளியன்றும் இந்தச் சிவன் கோவிலுக்கு அம்மாவுடன் வந்து கொண்டிருக்கும் இவள், கடந்த சில வாரங்களாகப் பூசை நேரங்களில் அந்தப் பெரியவரைப் பார்த்திருக்கிறாள். தேவாரங்கள் பாடி பக்தியோடு அவர் செய்கின்ற பிரார்த்தனையைக் கண்டு தன்னையறியாமலேயே அந்தப் பெரியவரிடம் அவளுக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது. "தாத்தா" என்று அவரைக் கூப்பிட்டு ஏதாவது பேச வேண்டும் என்ற ஒரு ஆவல்கூட மனசுக்குள் தோன்றியிருந்தது.

பூசை முடித்து, தீபம் காட்டி ஐயர் எல்லோருக்கும் விபூதிப் பிரசாதம் கொடுக்க, தீபத்தைத் தொட்டுக் கும்பிட்டு விபூதி அணிந்து கொள்கிறார்கள். உள் பிரகாரத்தைச் சுற்றி வருவதற்காகப் போன அம்மாவுடன் சேர்ந்து போகாமல், தாத்தாவுடன் பேசிவிடும் முனைப்பில் நின்ற சிறுமி பெரியவருக்கருகில் போகிறாள்.

"தாத்தா!" தூணருகில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தவர் கண் திறந்து பார்க்கிறார்.

“நீயா என்னைத் தாத்தா எண்டு கூப்பிட்டாய்? என்னம்மா?”

“சும்மா... உங்களோடை கதைக்க..”

பெரியவர் வாய்விட்டுச் சிரிக்கிறார். முகத்தில் மகிழ்ச்சியின் ரேகைகள்.

“என்னோடையா? என்ன கதைக்க வேணும்? சொல்லு..”

“இல்லை தாத்தா... கொஞ்ச நேரம் முதல்லை நீங்க பாடின பாட்டை இப்பவும் ஒருக்கா பாடுவீங்களா?”

“தேவாரம்... திருவாசகம்.. எல்லாம் பாடினன். அதிலை எந்தப் பாட்டு?”

“கற்பூர கௌரம்..”

“ஓ. அது பாட்டில்லை ராசா மந்திரம் சிவபெருமான்ரை மந்திரம். இதோ... உனக்காக...”

பெரியவர் கண்கள் மூடிப் பரவசமாக இசையுடன் சேர்த்து அந்த மந்திரத்தைச் சொன்னபோது கண் வெட்டாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்த சிறுமிக்கு ஒரே ஆச்சரியம். கடந்த சில வாரங்களாகப் பெரியவர் இசைத்து வருகின்ற இந்த மந்திரம் அவளுக்கு மனப்பாடம் ஆகிவிட்டிருந்தது.

“ நன்றி தாத்தா ”

“ நல்லது. உன்ரை பேரென்னம்மா? ”

“உமையாள்”

“அட... உமையாள். அருமையான பேர். பார்வதியின்ர இன்னொரு பேர்”

“உமையாள்!”

பிரகாரம் சுற்றிவந்த அம்மா கூப்பிட, “நான் போட்டு வாறன் தாத்தா” என்று சொல்லி அம்மாவிடம் ஓடுகிறாள்.

“ஐயா! ஒரு அரிச்சனை செய்ய வேணும்”

தட்டுடன் வந்த ஐயர் “என்ன பேருக்கு?” என்று கேட்டார்.

“உமையாள். அனுச நட்சத்திரம்” விளக்கைத் தொட்டுக் கண்களில் ஒற்றிய அம்மா உமையாளையும் அப்படியே செய்ய வைக்கிறா. மூலத்தானத்தில் சிவனுக்கு முன்னால் நின்று, “ஓம்..” என்று ஆரம்பித்த ஐயர் மந்திரங்கள் பல சொல்லி பூக்களைப் போட்டு தீபம் காட்டுகிறார்.

உமையாள். விருச்சிக ராசி.. என்ற இரண்டே இரண்டு சொற்கள் தவிர, ஐயர் கூறியவற்றில்



எதுவுமே புரியவில்லை சிறுமிக்கு. என்றுமில்லாத, இந்த அர்ச்சனை நடைமுறை பற்றி மனசுக்குள் பல பல கேள்விகள். வீடு திரும்பும்போது அம்மாவிடம் கேட்டாள்.

“அம்மா..! அரிச்சனை செய்யேக்கை ஐயர் என்ன சொல்லிப் பூசை பண்ணுறவர்?”

“ஆற்றை பேருக்குச் செய்யிறமோ அவை சுகமா இருக்க வேணுமெண்டு சாமியிட்டைக் கேட்டுக் கும்புடுவார்.”

“எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை. அவர் என்ன பாசையில அதைச் சொல்லுறவர்?”

“அது சமஸ்கிருத மொழி”

“உங்களுக்கு சமஸ்கிருதம் தெரியுமா அம்மா?”

“இல்லை.. ஏன் கேக்கிறாய்?”

“அப்ப ஐயர் சாமீட்டைச் சொல்லுறது உங்களுக்கு எப்பிடித் தெரியும்?”

“உமையாள்.. வரவர உனக்கு வாய் மெத்திப் போச்சு. அரிச்சனை செய்யேக்கை ஐயர் இப்பிடித்தான் சொல்லுவாரெண்டு தெரியாதே..? வேறை என்ன சொல்லுவார்? இதுக்கு பாசை தெரியவேணுமெண்ட அவசியமில்லை.. பேசாமை வா.. ”

உமையாளின் மனம் சமாதானம் அடையவில்லை.

அடுத்த வெள்ளிக்கிழமை. அம்மாவோடு சிவன்



கோவிலில் உமையாள். பெரியவர் கண்மூடி சில தேவாரங்கள் பாடி, கடைசியில் பக்தி மேலிட அந்த சிவன் மந்திரத்தை சொல்கிறார். "கற்பூர கௌரம் கருணாவதாரம்" அம்மா பிரகாரத்தை வலம் வர, உமையாள் பெரியவரிடம் ஓடுகிறாள். மந்திரம் சொல்லி முடித்துக் கண்களைத் திறந்த பெரியவர் அருகில் உமையாள் நிற்பதைக் கண்டார்.

"உமையாள். எப்பிடி இருக்கிறாயம்மா?"

"நான் நல்ல சுகம் தாத்தா, உங்களிட்டை ஒண்டு கேக்கலாமா?"

"ம் கேள் ராசா. என்ன விசயம்?"

"அது தாத்தா நீங்கள் இப்ப சொன்ன மந்திரத்தை எனக்குத் தமிழிலை சொல்லித் தாறீங்களா? எனக்கு விருப்பமாயிருக்கு."

"அது சமஸ்கிருதம். தமிழிலை சொல்ல எனக்குத் தெரியாது.."

"ஓ... அப்பிடியே. பொறுங்கோ தாத்தா வாறன்" என்று சொல்லி அவ்விடம் விட்டு அவசரமாக ஓடிய உமையாள், நேராக சிவன் வாசலில் போய் நிற்பது தெரிய, "இந்தக் குழந்தை என்னதான் செய்யப் போறாள்?" என்றெண்ணிய பெரியவர், உமையாளைத் தொடர்ந்து தானும் பின்னால் போக,

"ஐயா!" என்ற அவளுடைய குரலைக் கேட்டு ஐயர் அவளை நோக்கி வருவது தெரிந்தது.

"என்னம்மா? என்ன வேணும்? இந்தா வாழைப்பழம். சாப்பிடு" என்று சொல்லி ஒரு வாழைப்பழத்தை உமையாளிடம் நீட்டினார். அதைக் கையில் வாங்கிக்கொண்டவள் ஐயரைப் பாரத்து,

"அந்தக் கற்பூர கௌரம் எண்ட மந்திரத்தை எனக்குத் தமிழிலை சொல்லித் தாறீங்களா ஐயா?" என்று கேட்டபோது, இதைச் சற்றும் எதிர்பார்க்காத ஐயர் திடுக்கிட்டுப் போனார். சிறிது நேரம் உமையாளையே பார்த்தபடி எதுவும் பேசாமல் நின்றார்.

"அது சிவனுடைய மந்திரம்" என்றார்.

"தெரியும் அந்தத் தாத்தா சொன்னவர் அவருக்கு அதைத் தமிழிலை சொல்லத் தெரியாதாம். உங்களுக்குத் தெரியும்தானே? அதுதான் கேட்டன்" கும்பிட வந்தவர்களில் பலர் இந்த உரையாடலைக் கேட்டு அங்கு வந்து கூடிவிட்டார்கள். பிரகாரம் சுற்றி வந்த அம்மாவுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. பதட்டமாகினா.

"உமையாள். என்ன இது? ஐயாவைக் கரைச்சல் படுத்த வேண்டாம். வா என்னோடை." என்றவ,

"ஐயா! அவ சின்னப்பிள்ளை, தெரியாமை இப்பிடிக் கேட்டிட்டா.. குறை நினைக்காதேங்கோ." என்று ஐயரிடம் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் சொன்னா.

"இல்லையம்மா.. குழந்தை கேட்டதில எந்தப் பிரச்சனையும் இல்லை. தமிழிலை தேவாரங்கள் பாடுறம். அப்பிடிக் கருத்துத் தெரிஞ்சு பாடேக்கை ஒவ்வொரு சொல்லும் எங்கடை உயிர்வரைக்கும் போய் ஒரு பக்திப் பரவசத்தை உண்டாக்குது. அதே நேரம் பெரும்பாலான மந்திரங்கள் தமிழ் இல்லை. பாடுறபோதோ அல்லது சொல்லுற போதோ பக்தி ஏற்படலாம். ஆனா அது உயிரோடை கலந்து ஏற்படுற பக்தியாக இருக்கமுடியாது. எனக்கு ரெண்டு மொழியும் தெரிஞ்சபடியால இது பிரச்சனையில்லை.. சின்னப்பிள்ளையா இருந்தாலும் உமையாள் எங்களையெல்லாம் யோசிக்க வைச்சிட்டாள். நல்லது உமையாள், நீ கேட்டதுபோல அந்த மந்திரத்தை இப்ப நான் தமிழிலயே சொல்லுறன்."

"கற்பூர கௌரம் - கற்பூரம் போன்ற வெண்மை

நிறம் கொண்டவனை,

கருணாவதாரம் - கருணை வடிவானவனை,

சம்ஸார சாரம் - உலக வாழ்க்கையின் சாரமாக விளங்குபவனை,

புஜஹேந்திர ஹாரம் - புஜ என்றால் பாம்பு. கேந்திர பாம்புகளின் அரசன்..ஹாரம் மாலை..

பாம்பரசனை மாலையாக அணிந்தவனை,

பவம் பவானி சகிதம் நமாமி - பவம் உலகங்களின் காரணனை.. பவானி சகிதம் அம்பிகை சமேதனை, நமாமி அடியேன் வணங்குகிறேன்.

கற்பூரம் போன்ற வெண்மை நிறம் கொண்டவனை, கருணையே வடிவானவனை, உலக வாழ்க்கையின் சாரமாக விளங்குபவனை, பாம்பரசனை மாலையாக அணிந்தவனை, என் உள்ளத்தாமரையில் என்றும் வசிப்பவனை, உலகங்களின் காரணனை, அம்பிகை சமேதனை அடியேன் வணங்குகிறேன் "

"உமையாளுக்கு இப்ப சந்தோசமா?" ஐயர் இப்படிக் கேட்டபோது, கணகள் பளிச்சிட மகிழ்ச்சியோடு தலையாட்டினாள் உமையாள். அர்த்தம் தெரிந்தபோது அத்தனை பேரும் உயிர் கரைந்து நின்றார்கள்.

இதுவரை காலமும் அந்த மந்திரத்தை உச்சரித்த வேளைகளில் ஏற்பட்ட பக்தியின் சிலிர்ப்பு, இதோ இன்று இந்த நிமிடத்தில் பல மடங்காகி உயிர் வரை சென்று ஊடுருவி ஆன்மாவைத் தொட்ட போது, கை கூப்பி சிவனை வணங்கியபடி நின்றிருந்த பெரியவரின் கண்கள் நீரைச் சொரிந்தன.



# மழைக் காலம்

கார்கால மல்லிகை
கணக்கின்றி
கருக்கட்ட
ஆரம்பமாயிற்று புதியதொரு
மழைக்காலம்.

இளங்காற்றில் மழைத்துமிகள் நம்
வீட்டுச் சாரல் வர மனதினிலோ
பெருங் கொண்டாட்டம்.

இதமான சுகம் நுகர்ந்திருக்கையில்
திடீரென்று பூமி இருள் வானம்
கவிழ்ந்து பூத்துறலாய் பெய்த மழை
பூதாகார உருவெடுத்து கொட்டித்தீர்த்தது.

ஐயிரண்டு நாளாகியும் அடித்த மழை
ஓயவில்லை வெள்ள நீர்
பெருக்கெடுக்க வீதி எல்லாம்
புதுக்குளங்கள்.

கண் அளக்கும் தூரம் எல்லாம்
சமுத்திரமாய் வயல் நிலங்கள்
நெருப்பு மூட்ட விறகின்றி
கடும் குளிரால் பற்கள்
தொடர்பின்றிக் கிடுகிடுக்க.

மழையோடு வந்து விழுந்த சிறு
நண்டுகளோடு மீன்களும் கூடவே
விளையாட அயல் வீட்டு நண்பர்களும்
அந்த தொடர் மழையில் கூட
தொலையாத மகிழ்சியை
மட்டுமே கண்டோம்.

புதுக்குளத்தின் சமுத்திரத்தில்
நீர்ப்பறவைகளாய் நீச்சலடித்த அந்த
அழகான மழைக்காலம் மீண்டும்
தூறலாய் எனக்குள்!

தர்சினி



# என் தோழி அவள்

மான் விழிகளையுடையாள்
அவள் கால்கள் பட்டு
எறும்பும் உயிர்தெழும்
றோசாவின் இதழ்கள்
அவள் உள்ளங்கை

இவளின் தாவணி
பாதையை சுத்தமாக்கும்
பட்டுவியாபாரிக்கு
இவள் இலட்சுமி

பள்ளிப்பருவமது
அவளருகில் நானும்
படிப்பில் சுட்டி
விளையாட்டில் சூரி

இடம்பெயர்ந்தோம்
வெவ்வேறு திசைகளில்
சொந்தமண்ணில் ஏதிலிகளாய்
காலம் கடந்து கண்டேன்

அக்கினிப்பார்வை
அனல்பறக்கும் பேச்சு
வலிந்த தோள்
உரமேறிய கைகள்

நீண்ட மேற்சட்டை
கணுக்கால் வரை
காற்சட்டை
இடையே ஒரு பட்டி

வீரத்தின் காரிகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
கடமை உடையவளாய்
கரிகாலனின் தங்கையாய்

தமிழச்சியின் வீரத்தினை
தாங்கிவந்து நின்றாள்
என்ன ஆச்சரியம்
அவள் என் தோழி.

-சசி -




அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும்...
தமிழீழ மண்ணே உன்னை மறப்பேனா நீ என் அன்னை...